01 - 03

# Saturday மெயில்

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

17-10-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=

# நீருக்கு அடியில் இன்று அமைச்சரவை கூட்டம்



இன்றைய தினம் உலகின் முதன் முதலான நீருக்கு அடியிலான அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது. தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான சங்கத்தின் (சார்க்) உறுப்பு நாடுகளில் ஒன்றான மாலைதீவின் அமைச்சரவையே இந்த 'சாதனையை' நிகழ்த்தவிருக்கிறது.

தலைநகர் மாலேயில் இருந்து 20 நிமிடங்களில் பயணம் செய்யக் கூடிய கிறிஃபுஷி என்ற தீவுக்கு அப்பால் கடல் நீரின் கீழ் நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி மொஹமட் நஷீட் தலைமை தாங்குகிறார்.

காலநிலை மாற்றத்தினால் எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடிகள் தொடர்பில் உலகின் கவனத்தை ஈர்ப்பதே இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் நோக்கமாகும். எதிர்வரும் டிசம்பரில் டென்மார்க் தலைநகர் கொபன்ஹேகனில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மகாநாட்டுக்கு முன்னதாக காபன் வெளியிடும் அளவைக் கடுமையாகக் குறைக்குமாறு சகல நாடுகளையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும் ஆவணம் ஒன்றில் மாலைதீவு அமைச்சர்கள் இன்றைய கூட்டத்தில் கைச்சாத்திடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொபன்ஹேகனில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் முன்னைய கியோட்டோ உடன்படிக்கையை மாற்றீடு செய்வதற்கான உடன்படிக்கையொன்று தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1992 இல் றியோடி ஜெனீரோவில் நடைபெற்ற புவி உச்சி மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட யோசனையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் இறுதியில் ஜப்பானின் புராதன நகரான கியோட்டோவில் கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் இணங்கிக் கொள்ளப்பட்டதே கியோட்டோ உடன்படிக்கையாகும். இதுவரை சுமார் 140 நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த உடன்படிக்கையின் பிரகாரம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ரஷ்யா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து உட்பட 39 அபிவிருத்தி அடைந்த நாடுகள் 1990 ஆம் ஆண்டளவில் வெளியிட்ட காபனீரொட்சைட்டின் அளவை விட 5.2 சதவீதம் குறைவாக வெளியிடும் வகையில் அவற்றின் கொள்கைகளையும் திட்டங்களையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

(2ஆம் பக்கம் பார்க்க)




Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியல்



ஹவார்ட் பல்கலைக்கழகம்

# முதல் நூறில் ஒரு இந்திய பல்கலைக்கழகம் கூட இல்லை

இந்தியாவில் உயர்கல்வி பெரியதரத்தில் இருப்பதாக நம்மவர்களிடையே ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால், லண்டனில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வொன்றில் உலகின் தரமிக்க 100 பல்கலைக்கழகங்களில் எந்தவொரு இந்தியப் பல்கலைக்கழகமும் அடங்கவில்லையே!

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்த வரை, அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமுமே முன்னணியில் திகழ்கின்றன. 2009 ஆம் ஆண்டில் அதிசிறந்த தரமான பல்கலைக்கழகமாக அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகமே தொடர்ந்தும் மதிப்பிடப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் கடந்த வருடம் மூன்றாம் இடத்தில் இருந்தது. இவ்வருடம் அப்பல்கலைக்கழகம் இரண்டாவது இடத்துக்கு உயர்ந்திருக்கிறது. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகம் இத்தடவை மூன்றாம் இடத்துக்குப் போயிருக்கிறது.

*QS/Times Higher Education rankings* பிரகாரம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தை லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி முந்தியிருக்கிறது. கடந்த வருடம் நான்காவது இடத்தில் இருந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் லண்டன் இம்பீரியல் கல்லூரியுடன் சேர்ந்து ஐந்தாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் உலகில் உள்ள முதல் 10 திறமான பல்கலைக்கழகங்களில் நான்கு பல்கலைக்கழகங்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவை என்றும் முதல் 100 பல்கலைக்கழகங்களில் இங்கிலாந்தின் 18 பல்கலைக்கழகங்கள் அடங்குவதாகவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சிறந்த முதல் 100 பல்கலைக்கழகங்களுள் வரும் ஆசியப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை இத்தடவை 14 (கடந்த வருடம்) இலிருந்து 16 ஆக உயர்ந்திருக்கிறது. டோக்கியோ பல்கலைக்கழகம் 22 ஆம் இடத்தில் இருக்கிறது. ஆனால், ஆசியப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை டோக்கியோ பல்கலைக்கழகமே முதலாவது இடத்தில் இருக்கிறது. ஹொங் கொங் பல்கலைக்கழகம் 24 ஆவது இடத்துக்குப் போயிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முதல் தரமான 10 பல்கலைக்கழகங்கள் வரிசை வருமாறு;

ஹவார்ட் (அமெரிக்கா), கேம்பிரிட்ஜ் (யூ.கே.), யேல் (அமெரிக்கா), லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி (யூ.கே.), லண்டன் இம்பீரியல் கல்லூரியும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் ஐந்தாம் இடத்தில், சிக்காகோ பல்கலைக்கழகம் (அமெரிக்கா), பிரின்ஸ்ரன் பல்கலைக்கழகம் (அமெரிக்கா), எம்.ஐ.ரி. (மசாசூசெற்ஸ்,அமெரிக்கா), கலிபோனியா தொழில் நுட்ப நிறுவனம் (அமெரிக்கா).

எவ்வாறெனினும் முதல் தரமான 100 பல்கலைக்கழகங்களில் அடங்கும் வடஅமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை கடந்த வருடம் 42 ஆக இருந்தது. இவ்வருடம் அந்த எண்ணிக்கை 36 ஆகக் குறைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## நீருக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி)

இந்த இலக்கு 2008-2012 காலகட்டத்திற்குள் எட்டப்பட வேண்டும் என்றும் உடன்படிக்கையில் கோரப்பட்டது. ஆனால், இந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் எந்தவொன்றுமே இது வரை மேற்கூறப்பட்ட இலக்கை அடையக்கூடியதாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அக்கறை காட்டவில்லை. அதனால், புதியதொரு உடன்படிக்கையை செய்து கொள்வதற்காகவே கொபன் ஹேகன் மகாநாடு டிசம்பரில் கூட்டப்படுகிறது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மாலைதீவு அமைச்சர்கள் அண்மைய வாரங்களாக நீர்மூழ்கி அங்கிகளை அணிந்து கடலில் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். கூட்டத்தின் போது நீர் மூழ்கி அங்கிகளையும் தொடர்பாடலுக்காகக் கைச் சமிக்ஞைகள் மற்றும் சிலேட்டுகளையுமே அமைச்சர்கள் பயன்படுத்துவர்.

மாலைதீவு 1192 பவளப்பாறைத் தீவுகளை உள்ளடக்கிய ஒருநாடாகும். கடல் மட்டத்தில் இருந்து வெறுமனே 1.5 மீற்றர் உயரத்திலேயே அது அமைந்திருக்கிறது. கடல் மட்டம் உயர்வதனால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் மாலைதீவு காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய வாதப் பிரதிவாதங்களில் தன்னை முன்னரங்க நாடாக நோக்குகிறது.

கடல் மட்டம் தொடர்ந்து உயர்வடைந்து கொண்டு போகும் பட்சத்தில் மாலைதீவு 100 வருடங்களுக்குள் கடலுக்குள் அமிழ்ந்து விடும் என்று அஞ்சப்படுவதால் அதன் 330,000 மக்களுக்கும் புதியதொரு 'தாயகத்தை' (அவுஸ்திரேலியா, இந்தியா அல்லது இலங்கையில்) தேடுவது குறித்து அரசாங்கம் தீவிரமாக சிந்தித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி நஷீட் செய்தியாளர் மகாநாடொன்றை நடத்தவிருக்கிறார் என்று மாலைதீவு அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. நீருக்கு அடியில் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு காப்புறுதி வழங்குவதற்கான அறிக்கையொன்று கடந்த திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

சுற்றாடல் பாதுகாப்பு விவகாரங்களில் அக்கறையுடைய 350.org. என்ற சர்வதேச அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் பரந்தளவிலான இயக்கத்தின் ஒரு அங்கமே மாலைதீவு அமைச்சரவையின் நீருக்கு அடியிலான கூட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, கலாசாரத்தை இழக்கும் குடாநாடு



யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் கல்வியைத் தங்கள் கண்போல் நேசிப்பவர்கள். இதனால்தான் இத்தகைய துன்பங்களும் இழப்புகளும் ஏற்பட்ட போதிலும் அவர்கள் கல்வியைக் கைவிடவில்லை. ஒருபுறம் அழிவுகள் நடந்துகொண்டிருந்த போதிலும் மறுபுறம் எதையும் பொருட்படுத்தாமல் இவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

1990ஆம் ஆண்டு மற்றும் அதனை அண்மித்த காலப்பகுதியில் குடாநாட்டில் யுத்தம் தீவிரம் பெற்றதால் பாரிய பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டன. குப்பி விளக்கில் படிப்பதற்குக் கூட மண்ணெண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு. இந்நிலையில் சைக்கிள் டைனமோவைச் சுழலச் செய்து அதிலிருந்து வருகின்ற மின் ஒளியைப் பயன்படுத்தி தங்கள் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்திய பெற்றோர்கள் இன்றுவரை எங்கள் மத்தியில் வாழ்கிறார்கள்.

எதை இழந்தாலும் எமது மூலதனமான எம்மை வளர்க்கும் கல்வியை இழக்க மாட்டோம், இழக்கக்கூடாது என்று மக்கள் எடுத்த சிந்தனைக் கருவே இன்று வரை கல்விநிலை சிறந்து விளங்கக் காரணமாக இருக்கின்றது.

ஆயினும்த கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் குடாநாட்டில் இருந்த கல்வி உயர்வு இன்று இல்லை. யுத்தத்தின் கொடுமைக்குள் சிக்குண்டு கல்வியும் சீரழிந்துள்ளது. – சீரழிக்கப்பட்டுள்ளது.

இதனால் முன்னர் கொழும்புக்கு அடுத்த படியாக இருந்த யாழ்.குடாநாட்டின் கல்வி இன்று பாரிய பின்னடைவைக் கண்டிருக்கின்றது.

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் இருந்த நடைமுறை ரீதியான ஒழுங்கு, கட்டுப்பாடுகளுக்கும் தற்போது ஏற்பட்டு வருகின்ற ஒழுங்கு, கட்டுப்பாடுகளுக்குமிடையே பாரிய மாற்றங்கள் காணப்படுகின்றன.

இந்த மாற்றமான சூழல்களுக்கு ஏற்ப யாழ். குடாநாட்டு மாணவ மாணவியரைத் தயார்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாக இருக்கின்றது.

யாழ். குடாநாட்டு மாணவர்கள் இன்று பலவகையான மாற்றங்களுக்கும் தாக்கங்களுக்கும் உட்பட்டுப் பாதிப்புகளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இவற்றுள் முக்கியமானது கையடக்கத் தொலைபேசிப்பாவனை. அவற்றோடு மோட்டார் சைக்கிள்களும் இணைந்திருக்கின்றன.

பல பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை. சில பெற்றோர் பிள்ளைகளின் பிறந்த நாள்களின் போது அவர்களுக்குக் கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிப் பரிசளிப்பதைக் கூட அவதானிக்க முடிகின்றது.

அத்தோடு தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்ற பிள்ளைகளுக்கு [பெண் பிள்ளைகளுக்குக் கூட] பெற்றோர் மோட்டார் சைக்கிள்களை வாங்கிக் கொடுத்துள்ளமையை காணமுடிகிறது.

"கையடக்கத் தொலைபேசிகள் தகவல் பரிமாறுவதற்கு" என்ற நிலையிலிருந்து மாற்றம் பெற்று தற்போது மாணவ, மாணவியரைக் கலாசாரச் சீரழிவை நோக்கிச் செல்லவைக்கின்ற கருவியாகவும் மாறியிருக்கின்றது. கமரா வசதியுடைய கையடக்கத் தொலைபேசிகள் இதில் பிரதான பங்கு வகிக்கின்றன. இத்தகைய தொலைபேசிகளுக்கு இணைய வசதிகள் [ஜி.பி.ஆர்.எஸ். இணைப்பு] வழங்கப்பட்டிருப்பது இதற்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

மாணவ, மாணவியருடன் இணைந்த இந்தக் கையடக்கத் தொலைபேசியூடான பல கலாசாரச் சீரழிவுச் சம்பவங்கள் குடாநாட்டின் பல பிரதேசங்களில் நடைபெற்றிருக்கின்றன, நடைபெற்றுக்கொண்டும் இருக்கின்றன.

பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்று பாதியில் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவேளை சக மாணவர்களால் கமராபோன் மூலம் புகைப்படம், வீடியோப் படம் எடுக்கப்பட்ட சம்பவங்கள், இந்தப் படங்கள் ஏனைய நண்பர்களின் மூலமாகப் பல கையடக்கத் தொலைபேசிகளுக்கு அனுப்பப்பட்ட சம்பவங்கள், பாடசாலைக்கு அல்லது தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்வதாகக் கூறிச் சென்று பாலியல் தொடர்பான திரைப்படங்கள் பார்த்த சம்பவங்கள், ஏன்...மாணவிகள் பலர் கருக்கலைப்புச் செய்த சம்பவங்கள் கூட அண்மைக் காலங்களில் குடாநாட்டில் இடம்பெற்றுள்ளன.

மாணவ, மாணவியரிடையே ஏற்பட்டுள்ள இவ்வாறான மாற்றங்களுக்கும் சீரழிவுகளுக்கும் கையடக்கத் தொலைபேசிகள் மட்டும்தான் காரணமென்று கூற முடியாது.

யாழ்.மாவட்டத் தமிழ்ப் பெண்களுடைய கலாசாரத்தில் தற்போது மேலைத் தேயத்தினதும் தென்னிலங்கையினதும் நடைமுறைகள் தாக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக, ஆடையணிதல் முறைகளில் இவற்றை அவதானிக்க முடிகிறது.

தற்போது தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்ற மாணவிகள் அணிந்து செல்கின்ற ஆடைகளைப் போன்ற ஆடைகளை கடந்த 10 வருடத்திற்கு முன்னர் வீட்டில் ஓய்வாக இருக்கின்ற போது கூட குடாநாட்டுப் பெண்கள் அணிந்திருக்க மாட்டார்கள்.

தென்னிந்தியச் சினிமா நடிகைகளின் ஒட்டலான ரீ–சேர்ட் கலாசாரம் யாழ். குடாநாட்டுப் பெண்களிலும் மாணவிகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. சில பெண்களைப் பார்க்கின்ற இளைஞர்கள் 'குட்டி ஃபொறினா, லோக்கலா" என்று கேட்குமளவிற்கு குடாநாட்டு மாணவிகளின் ஆடைக் கலாசாரம் மாறியிருக்கின்றது.

இவற்றோடு இணைய வசதிகளூடாக இன்றைய மாணவ மாணவியர் 'பலதும் பத்தும்' பார்க்கக்கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

இதனைவிட பாடசாலை தொடங்குவதற்கு முன்னரும் முடிவடைந்த பின்னரும் வீதிகளில் நின்று மாணவிகளைப் பின்தொடர்ந்து செல்கின்ற 'கட்டாக்காலி' இளைஞர்களின் காதல் தொல்லைகளும் அங்கசேஷ்டைகளும் குடாநாட்டில் பரவலாகவே இடம்பெறுகின்றன.

தமிழ் மக்களுக்கென்றிருந்த ஆன்மீகக் கல்விமுறை மாற்றம் பெற்று இவ்வாறான சீரழிவை நோக்கி எமது மாணவர்கள் உந்திச் செல்லப்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு யாருடைய கைகளில் இருக்கிறது?

கடந்த 30 வருட காலமாக இழந்தவற்றை மீட்க வேண்டிய இந்த வேளையில் எங்களிடம் இருக்கின்ற கலாசாரங்களையே தொலைக்க முடியுமா?

நீண்ட காலமாக இருந்த நடைமுறை சார்ந்த ஒழுங்குகள் மாற்றம் பெற்றிருக்கின்ற இந்தவேளையில் அதன் தாக்கம் மாணவர்கள் மத்தியில் இலகுவாகப் பாதிப்பை ஏற்படுத்துவதையே அவதானிக்க முடிகிறது.

இந்த நடைமுறை மாற்றங்களுக்குள் நின்று மாணவ, மாணவியர் தவறான வழியில் செல்வதைத் தடுத்து நிறுத்தி அவர்களை நேரிய பாதையில் கொண்டு செல்ல வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

இதற்கான செயல்திட்டங்களைத் தயாரித்து அதனை மாணவர்கள் மத்தியில் செயற்படுத்த அல்லது விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் மாற்றத்துக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவர்களாக அவர்களைத் தயார்படுத்த வேண்டிய பொறுப்பும் பெற்றோர்களிடமா ஆசிரியர்களிடமா அல்லது கல்வி அதிகாரிகளிடமா இருக்கின்றது? அல்லது இவர்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமா? என்ற கேள்வி இங்கு எழுந்திருக்கின்றது.

எந்த விடயத்தில் பெற்றோர்களின் பங்கு அதிகளவாக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அதிகளவு சுதந்திரம் கொடுப்பது அவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது.

குறிப்பாகத் தொலைபேசியையும் மோட்டார் சைக்கிளையும் வாங்கிக் கொடுக்கின்ற பெற்றோர்கள் பிள்ளைகளுக்குத் தேவையான பணமும் கொடுக்கின்றனர். ஆனால், அந்தப் பணம் எந்த வகையில் செலவு செய்யப்படுகின்றது என்பதை அவர்கள் கேட்பதில்லை. இது மாணவர்களைத் தவறு செய்யத் தூண்டுகிறது.

உதாரணமாக, பெற்றோர்கள் வழங்கிய அதிகளவான பணத்தில் தான் கும்மாளமடித்ததுடன் நின்றுவிடாமல் தனது பள்ளித் தோழியான மாணவியொருத்திக்கும் கையடக்கத் தொலைபேசியொன்றை வாங்கிக் கொடுத்திருக்கின்றான் ஒரு மாணவன். அவளுடன் தொடர்ச்சியாக உரையாடி அன்பை வளர்த்த பின்னர் தனது கையடக்கத் தொலைபேசி மூலம் அவளின் அங்கங்களை வீடியோப் படமெடுத்து அதனை ஏனைய நண்பர்களுக்கு வழங்கிய சம்பவம் அண்மையில் குடாநாட்டில் குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தத்தமது பிள்ளைகளின் நன்மை கருதி இவ்வாறான சம்பவங்களைப் பெற்றோர் மறைத்து வைக்கின்ற அதேவேளை, தகவல் அறிந்த ஊடகங்கள் கூட 'மாணவ, மாணவியரின் நன்மை கருதி' என்ற பெயரில் அவற்றை மூடி மறைக்கின்றன.

பெற்றோர்களின் அவதானத்துடன் கூடிய கண்டிப்பும் தண்டிப்பும் ஆசிரியர்களின் முழுமையான அவதானமின்மையும் இவ்வாறான செயல்களுக்குக் காரணமென்று சுட்டிக்காட்டப்படுகிறது. இதுபோன்ற எத்தனையோ சம்பவங்கள் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

குடாநாட்டில் தற்போது ஊரடங்குச் சட்டம் இரவு 11 மணியாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல தனியார் கல்வி நிலையங்கள் இரவு 8 மணிவரை வகுப்புகள் நடத்துவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான இரவு வகுப்புகளுக்குச் செல்கின்ற மாணவ, மாணவியர் தவறுகளைச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த விடயத்தில் பெற்றோரும் தனியார் கல்வி நிலையத்தினரும் அதிக அக்கறையெடுக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மேற்கூறப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் மாற்றங்களையும் சுட்டிக்காட்டி இதிலிருந்து மாணவ மாணவியரைச் [சகோதர சகோதரர்களை] காப்பாற்றக்கூடிய செயற்றிட்டங்கள் ஏதாவது தயாரிக்கப்பட்டிருக்கின்றனவா? என்று சில கல்வி அதிகாரிகளைக் கேட்டபோது 'இல்லை' என்பதாகவே அவர்கள் பதிலளிக்கின்றனர். அத்தோடு, பெற்றோர்கள் கண்காணிப்பாக இருந்தால் இவற்றைத்த தடுக்க முடியுமென்றும் கூறுகின்றனர்.

பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டுமென்ற அவர்களுடைய கூற்றை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் 'பந்தை' முற்று முழுதாகப் பெற்றோர்களின் பக்கம் நகர்த்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள், கோட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இவர்களுக்கு மேலாக மாகாணக் கல்வி அமைச்சும் இணைந்து காலத்திற்கேற்ற செயற்றிட்டங்களை வகுத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதன் மூலமே இழந்துபோன யாழ்.குடாநாட்டின் கல்வியை, கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிமையான இல்லற வாழ்வுக்கு தினமும் ஒரு அப்பிள்

தினமும் ஒரு அப்பிளை உட்கொண்டால் டாக்டரை தூரவிலக்கலாம் என்று கூறுவார்களே. கணவன் மனைவிக்கு தினமும் ஒரு அப்பிளை வாங்கிக் கொடுத்தால் குடும்ப வாழ்வு சிறக்கும் என்று தெரிய வந்திருக்கிறது.

தங்களது வாழ்வை இனிமையானதாக்குவதற்கு தாய்வானில் கணவர் ஒருவர் தனது மனைவிக்கு அரைநூற்றாண்டு காலமாக தினமும் ஒரு அப்பிளை வாங்கிக் கொடுத்து வருவதாக 'மெறிற் ரைம் ஸ்' என்ற தாய்வான் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

லீரா - பின் என்பது கணவனின் பெயர். அவருக்கு வயது 77. மனைவியின் பெயர் சுங்ஷின் - யூ (வயது 74) கடந்த ஞாயிறன்று இந்த தம்பதியர் தாய்வானில் தென்பகுதியில் உள்ள காஓசியூங் நகரில் தங்களது திருமணவாழ்வில் பொன்விழாவைக் கொண்டாடினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் தங்களது சந்தோசமான குடும்ப வாழ்க்கையின் இரகசியத்தை அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒரு அப்பிள் பழத்தை கையில் வைத்துக் கொண்டே இருவரும் உயிருள்ளவரை இனிய இல்லறவாழ்வைத் தொடரப் போவதாகச் சூளுரைத்தனர். அந்தப் புகைப்படம் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

லீ திருமணம் செய்த மூன்றாம் மாதத்தில் இருந்து அப்பிள்பழத்தை மனைவிக்கு வாங்கிக் கொடுக்கும் 'பாரம்பரியத்தை' ஆரம்பித்தாராம். தாய்வான் இராணுவத்தின் றிசேர்வ் படையில் இருந்த லீயுக்கு திருமணம் முடித்த மூன்றாவது மாதத்தில் கடமைக்கு வருமாறு அழைப்பு வந்தது. 30 நாட்களுக்கு இராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்பது அவருக்கு அப்போது பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

அப்பிள் பழங்களை மனைவி விரும்பி உண்டதை நன்கு தெரிந்திருந்த லீ ஒரு கூடை அப்பிளை வாங்கி மனைவிக்குக் கொடுத்து விட்டே இராணுவக் கடமைக்குச் சென்றார். அந்தக் கூடையில் 30 பழங்கள் இருந்தன. மனைவியுடன் தான் இல்லாத 30 நாட்களுக்கும் அந்தப் பழங்கள் போதுமானவை. தன்னை நினைத்துக்கொண்டு ஒருநாளைக்கு ஒரு பழத்தை சாப்பிடுமாறு மனைவியை லீ கேட்டுக் கொண்டார். '30 பழங்களையும் நீ சாப்பிட்டு முடிந்ததும் நான் வீட்டுக்கு வந்து விடுவேன். நாம் மீண்டும் இணைந்து இனிய இல்லறம் நடத்தலாம்' என்று அவர் கூறிச் சென்றார்.

அதற்குப் பிறகு தினமும் ஒரு அப்பிளை மனைவிக்காக லீ வாங்குவதை வழக்கமாக்கிக் கொண்டார். பழக்கடைகள் மூடப்படுகின்ற தினங்கள் அல்லது மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை அனர்த்தம் நிகழும் நாட்களைத் தவிர மற்றும் படி இவ்வலவுகாலமும் தினமும் மனைவிக்கு ஒரு அப்பிள் கிடைக்கத் தவறியதில்லையாம்.

'கணவர் எனக்காக வாங்கிவரும் இனிய அப்பிள் பழங்களே நான் இனிய வாழ்க்கையை அனுபவிக்க காரணம்' என்று சுங் கூறியதாக 'மெறிற் ரைம்ஸ்' தெரிவித்திருக்கின்றது. 1960 களிலும் 1970 களிலும் தாய்வானில் அப்பிள் பழங்களை வாங்குவதென்பது கட்டுப்படியாகாத விடயம். ஏனென்றால், தாய்வானில் அப்பிள் பயிர்ச்செய்கை அப்போது இல்லை. அமெரிக்காவில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டன.

ஆண்களே, நீங்களும் தினமும் அப்பிள் ஒன்றை வாங்கி மனைவிக்குக் கொடுத்து இனியவாழ்க்கை வாழலாமே!

# பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்



போக்குவரத்து நெருக்கடிமிக்க யுகமொன்றில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதுவும் நாளாந்தம் பஸ், ரயில் பயணமென்றால் சொல்ல வேண்டியதில்லை. காலையில் அலுவலகங்களுக்குச் செல்வது முதல் மாலையில் வீடுதிரும்பும் வரை படும்பாடு அப்பப்பா, எவ்வளவு சிரமம்.

சாதாரணமாக பஸ்களில் பயணம் செய்யும் போது சனநெரிசல் பலருக்கு வெறுப்பையும், கஷ்டத்தையும் ஏற்படுத்திய போதிலும் இளவட்டாரங்களுக்கு அதுவே பெரும் சுகானுபவங்களாக அமைகின்றது. ஜேப்படித்திருடர்களுக்கு சன நெரிசலில்தான் யோகங்கள் அடிக்கின்றன.

கடந்த 40 வருடங்களாக நானும் கொழும்புக்கு பஸ்ஸில்தான் நாளாந்தம் பயணம் செய்து கொண்டிருக்கின்றேன். இந்த 40 வருடகாலத்தில் பஸ் பயணத்தின் போது பல்வேறு பட்ட அனுபவங்களைக் கண்டுள்ளேன் அவற்றை உங்களுடன் தொடராக பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆரம்ப அனுபவம்

முதலில் 40 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் மினுவாங்கொடையிலிருந்து பஸ்ஸில் கொழும்புக்குப் புறப்பட்டேன். லங்கா மாதா என்ற தனியார் பஸ்ஸில் தான் ஏறினேன். அப்போது கொழும்புக்கான கட்டணம் 25 சதம் தான். என்னிடம் மொத்தமாக இருந்தது ஆக ஒரு ரூபாதான். அதுவும் அப்போதிருந்த ஒருரூபா தாளாகும். அதனை கண்டக்டரிடம் கொடுத்து 25 சதத்துக்கான டிக்கெட்டை பெற்றுக் கொண்டேன். மீதிக்காசை பின்னர் தருவதாக கண்டக்டர் கூறினார். அன்று எனக்கு வயது 22 அல்லது 23 தான். பஸ் சிறிதுதூரம் பயணமான நிலையில் சுமார் 15 நிமிடங்கள் கழித்து மீதிப் பணத்தைக் கேட்டேன். கண்டக்டர் பிறகு தருவதாக மீண்டும் சொன்னார்.

மேலும் சிறிது தூரம் செல்ல மீண்டும் மீதியைக் கேட்டேன். அப்போது அவர் கொஞ்சம் கடுகடுப்பாக சில்லறை கிடையாது கொஞ்சம் பொறுக்குமாறு கூறினார்.

கொழும்பை அண்மித்தபோது எனது மிச்சக்காசைத்தருமாறு கேட்டேன். இதுநடந்தது பேலி கொடை, பாலத்துறை பாலத்துக்கு அருகிலாகும். கண்டக்டருக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. உமது பணத்தை நான் விழுங்கிவிடப்போவதில்லை. கட்டணம் 25 சதத்தை தந்துவிட்டு ஒரு ரூபாவை பெற்றுக்கொள்ளும் என்று சொல்லிவிட்டார். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. நான் இறங்க வேண்டிய இடம் ஊத்தைமோல் சந்தியாகும். இப்போது அதுதான் ஸ்ரேடியம் சந்தி. ஆனால், மீதிப்பணம் கிடைக்கவில்லை. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக புறக்கோட்டை பஸ்நிலையம்வரை செல்ல வேண்டியிருந்தது. பஸ்நிலையத்தில் இறங்கிய பின்னர் கண்டக்டர் என் முகத்தைப் பார்க்காமலேயே 75 சதத்தை மடியில் போட்டு விட்டார். புறக்கோட்டையில் இருந்து நான் வனாத்தமுல்ல என்ற இடத்துக்குச் செல்ல வேண்டும். அன்று எனக்குத் தெரிந்த பாதை கிராண்ட்பாஸிலிருந்து தெமட்டகொடைவழியாகச் செல்லும் பாதையாகும். வேறுவழியின்றி புறக்கோட்டையிலிருந்து ஒவ்வொருவரிடமும் விசாரித்த வண்ணமே வனாத்த முல்லைக்கு நடந்தே சென்றேன்.

10 நிமிடங்களில் பஸ்ஸில் செல்ல வேண்டிய இடத்துக்கு சுமார் இரண்டரை மணிவரை நடந்தே சென்றேன். இந்த சம்பவத்தை என்னால் என்றைக்குமே மறக்கமுடியாது.அன்று முதல் இன்று வரை நான் பஸ்ஸில் ஏறுவதற்கு முன்னர் பஸ்கட்டணத்துக்குரிய பணத்தை மாற்றிய காசாக எடுத்துக்கொண்டே பஸ்ஸில் ஏறுவேன்.

சில சமயங்களில் பஸ்களில் பயணிகள் 50 ரூபா, 100 ரூபா தாள்களைக் கொடுத்துவிட்டு பிறகு மீதிக்காசு கேட்டால் அந்தத் தொகையை தரவில்லை என்று கூறி பயணிகளை ஏமாற்றும் கண்டக்டர் பேர்வழிகளையும் நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.


அந்த வகையில் 40 வருடத்திற்கு முன்னர் கண்ட பஸ்கண்டக்டர் இன்றைய கண்டக்டருக்கு முன்மாதிரியானவர் என்று சொல்லலாம்.

யாத்ரிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவம்

# யாழ்ப்பாணத்தில் தொற்றுநோயின் தாக்கத்தில் காசத்திற்கு பெரும்பங்கு



காசநோயானது உலகம் முழுவதும் தொடர்ந்து ஒரு பாரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக இருந்து வருகின்றது. குறிப்பாக வளர்முக நாடுகளில் இதன் தாக்கம் அதிகமாகும். அண்ணளவாக உலக சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் (2 பில்லியன்) Mycoba"citerium tuberculosis என்னும் காசநோயினை உண்டாக்கும் பக்றீரியாவின் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், காசநோய் உண்டாக்கக் கூடிய ஆபத்தினையும் எதிர்நோக்கியுள்ளனர். இவர்களில் 8 மில்லியனிலும் அதிகமானவர்கள் நோயின் தாக்கத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு உள்ளாவதுடன் ஏறத்தாழ 2 மில்லியன் தொகையினர் நோயினால் இறக்கின்றனர்.

தனியொரு தொற்றுநோயினால் அனர்த்தங்களில் ஏற்படும் இறப்புகளில் காசநோய் முதலிடம் வகிக்கின்றது. நோயின் தாக்கம் பொருளாதார ரீதியில் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் வயதெல்லையினரான 15-54 வயதினரை அதிகமாகத் தாக்குகின்றது. வளர்முக நாடுகளில் காசநோயின் விரைவான அதிகரிப்பு மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் காசநோயின் மீள்தாக்கம் என்பன உலக சுகாதார நிறுவனத்தால் காசநோயினை உலக அவசர நிலைமை எனப் பிரகடனப்படுத்த வழிசமைத்தது. உலகில் உள்ள காசநோயாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தென்கிழக்கு ஆசியாவில் வாழ்கின்றனர். வருடாவருடம் ஆசியாவில் 500,000 பேர் காசநோயினால் இறக்கின்றனர். இவையெல்லாம் உ[illegible]கத்தில் காசநோயின் நிலை[illegible]மை பற்றிய புள்ளிவிபரங்கள். யாழ்ப்பாணமும் இதற்கு விதிவிலக்கல்ல.

**யாழ்ப்பாணத்தில் 2009ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட காசநோயாளர்களின் எண்ணிக்கை**

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| தை | 23 |
| மாசி | 23 |
| பங்குனி | 10 |
| சித்திரை | 18 |
| வைகாசி | 26 |
| ஆனி | 14 |
| ஆடி | 16 |
| ஆவணி | 27 |
| புரட்டாதி | 19 |
| மொத்தம் | 176 |

**யாழ்ப்பாணத்தில் கடந்த வருடங்களில் அறிவிக்கப்பட்ட காசநோயாளர்களின் எண்ணிக்கை**

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 95 |
| 2007 | 351 |
| 2008 | 271 |

மேற்கூறிய புள்ளிவிபரங்கள் யாழ்ப்பாணத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை பற்றிய ஒரு உள்ளுணர்வை உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும். இவை வெறுமனே அறிவிக்கப்பட்டவை மட்டுமே. இன்னும் எம்மில் பலர் காசநோயுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அடையாளம் காணப்படாமலே இறந்து விடலாம். ஏன் இந்த நிலைமை.

### காசத்தினை நிறுத்தும் உத்திகள் தொலைந்து விட்டனவா?

காசநோய் வராது தடுக்கக்கூடிய ஒரு நோய். நோய்த்தொற்று ஏற்படாமல் முற்றாகக் குணமாக்கக் கூடியது. இருந்தும் நோய்க்கு சிகிச்சை பெற நோயாளிகள் இன்னும் தயங்குவது வருந்தத்தக்கது. நோய் பற்றிய அறியாமையே சமூக வடுவிற்கான பிரதான காரணமாகும்.

* காசநோயினை முற்றாகக் குணப்படுத்தலாம்
* காசநோய் ஒரு பரம்பரை நோயல்ல
* காசநோயாளிகளைப் புறம் தள்ளல் ஆகாது

என்பவற்றை யாவரும் அறிதல் வேண்டும். மேலும் நோயினை ஆரம்ப நிலையில் கண்டு பிடிப்பதற்கு யாவரும் குணங்குறிகள் பற்றி அடிப்படை அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

### காசநோயின் அறிகுறிகள்

* தொடர்ச்சியாக 3 வாரங்களுக்கு நீடிக்கும் இருமல்
* மாலை நேரக்காய்ச்சல்
* சளியுடன் இரத்தம் வெளியேறல்
* நிறைகுறைவடைதல்
* உணவில் விருப்பமின்மை
* இரவில் வியர்த்தல்
* களைப்பு
* நெஞ்சுவலி
* நிணநீர்க்கணுக்கள் வீக்கம்

மேலுள்ள குணக்குறியுள்ளவர்கள் தாமாகவே சளிப்பரிசோதனை செய்ய முன்வர வேண்டும். மேலும், இக்குணங்குறியுள்ளவர்களை வைத்தியரை நாடச்செய்வதில் சமூகமும் பெரும் பங்குவகிக்கமுடியும்.

காசநோய்க்கெதிராகப் போரிடுவதற்கு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படமுடியும்.

* தனிப்பட்ட நோயாளர்களுக்கு நோயினைப் பூரணமாக குணமடையச்செய்வதன் மூலம் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளில் பூரண திறனுடன் செயற்படச்செய்து அவர்களை தமது குடும்பத்தினுள்ளும் சமூகத்தினுள்ளும் உள்வாங்கி அவர்களது சமூகபொருளாதார அந்தஸ்தினை நிலைநிறுத்தல்.

### சமூகநோக்கம்

காசநோயின் பரம்பலை நோயினை ஆரம்பநிலையில் கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தல்.

நோயினை ஆரம்பநிலையில் கண்டுபிடித்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சையளிப்பதே நோய்ப்பரம்பலைத்தடுக்கும் ஒரேவழி.

### காசநோயைக்கட்டுப்படுத்தும் மேலும் சிலமுறைகள்

1. பொதுவான சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்தல்

உதாரணமாக இருமும்போதும் தும்மும்போதும் கைக்குட்டையினை பாவிக்க வேண்டும். கண்டகண்ட இடங்களில் துப்பக் கூடாது. நோயாளியின் சளியினை புதைக்க வேண்டும். அல்லது எரிக்கவேண்டும்.

2. காற்றோட்டமான சூரியஒளிபெறும் இடங்களில் வாழல்

3. போசனையுள்ள உணவுகளை உண்ணுதல்

4. விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

மருந்துகள் எடுப்பதால் தொற்றுத் தன்மை 2 கிழமைகளில் முற்றாக இல்லாது போகும். தொடர்ச்சியாக 3 கிழமைகளுக்கு மேல் இருமல் இருப்போர் சளிப்பரிசோதனை செய்ய முன்வரவேண்டும். காசநோய் சமூகத்தில் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் என்ற மனப்பாங்கு வளரவேண்டும்.

5. சமூகப் பங்களிப்பை அதிகரித்தல்

காசநோய் ஏற்படுவது பற்றி கலந்துரையாட வேண்டும். நோய் அறிகுறிகள் பற்றிக் கலந்துரையாடவேண்டும். காசநோய் அறிகுறி உள்ளவர்களை இனங்காண உதவுதல்வேண்டும். சிகிச்சை வழங்கும் இடங்களைக் கூறல்வேண்டும்.

''நிறுத்துகிறேன் காசத்தினை நான்'' எல்லோரும் ஒன்றாக ஒரே தொனியில் குரல் கொடுப்போம் ,கைகொடுப்போம்,வாழ்ந்துகாட்டுவோம்.

வைத்தியகலாநிதி
ந.ராஜேஷ்கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநோதமான கருத்தரிப்பு

அமெரிக்காவில் ஒரு பெண் இரண்டு குழந்தைகளை வயிற்றில் சுமக்கிறார். ஆனால், அவை இரட்டைக் குழந்தைகள் அல்ல. 'அந்த இரண்டு குழந்தைகளும், இரண்டு வார கால இடைவெளியில், உருவானவை' என டாக்டர்கள் கூறியுள்ளனர். ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, ஆர்கான்சாசை சேர்ந்தவர் டோட். இவரது மனைவியின் பெயர் ஜூலியா. இவர், கர்ப்பமாக இருந்தார். குழந்தையின் வளர்ச்சி குறித்து அறிந்து கொள்வதற்காக, 'ஸ்கேன்' செய்தார். 'ஸ்கேனை'ப் பரிசோதித்த டாக்டர்கள், ஜூலியாவின் வயிற்றில் இரண்டு குழந்தைகள் இருப்பதாகத் தெரிவித்தனர். மேலும், அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகள் அல்ல என்பது அவர்களுக்குத் தெரியவந்தது. டாக்டர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. இரண்டு கருக்களும், ஒரே நேரத்தில் உருவானவை அல்ல என்பதும், இரண்டு வார இடைவெளியில் உருவானவை என்றும் தெரிய வந்தது.

டாக்டர் கரேன் பாய்ஸ் கூறியதாவது; இதுமிகவும் அரிதான ஒரு நிகழ்வு. உலகிலேயே இதுவரை பத்துப் பேருக்குத்தான் இதுபோன்று இருந்துள்ளது. ஜூலியாவுக்கு 'ஸ்கேன்' எடுத்துப் பார்த்தபோது, ஒரு கரு உருவாகியுள்ளதும், அதன் அசைவுகளும் தெரியவந்தன. சிறிது நேரத்தில், மற்றொரு இதயத் துடிப்பும் கேட்டது. எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. முதல் கரு உருவாகி, இரண்டு வாரங்கள் கழித்து இரண்டாவது கரு உருவாகியுள்ளது. இரண்டு குழந்தைகளுமே ஒரே நாளில் பிறப்பதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு. இவ்வாறு கரேன் பாய்ஸ் கூறினார்.

தனது வயிற்றில் இரண்டு குழந்தைகள் வளர்வதை நினைத்து ஜூலியா மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போயுள்ளார். தன் வயிற்றில் முதலில் உருவானது பெண் குழந்தை என்றும், இரண்டு வாரங்கள் கழித்து உருவானது ஆண் குழந்தை என்றும் ஸ்கேனில் தெரியவந்துள்ளதால், அவற்றுக்கு முறையே ஜில்லியன், ஹட்சன் என ஜூலியா தற்போதே பெயரிட்டுள்ளார். எலி, குதிரை, கங்காரு போன்ற மிருகங்கள் தான் இது போல விநோதமாக கருத்தரிக்கும். மனிதர்களில் இந்த விநோத முறை மிக அரிது.

# செக்ஸில் பெண்களின் ஆரோக்கியம்!

செக்ஸ் உணர்வின் உச்சத்தை எட்டும் பெண்கள் அப்படி அனுபவப்படாத பெண்களை விட உடல் அளவிலும் மனதளவிலும் ஆரோக்கியமானவர்களாக இருக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

இவர்களை நோய் அவ்வளவு சீக்கிரம் அண்டுவதில்லையாம். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பெண்கள் சுகர்தாரத் திட்டத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் இது தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

செக்ஸ் வாழ்க்கையில் திருப்திகரமாக இருக்கும் பெண்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியமும் மன நலமும் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

20 முதல் 65 வயது வரையிலான 300 பெண்களிடம் இது தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டு இதன் முடிவுகள் குறித்து இந்தக் குழுவின் தலைவரான டாக்டர் சோனியா டேவிசன் கூறுகையில்; செக்ஸ் ரீதியாக திருப்தி இல்லாத பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் குறைவாகவே உள்ளது. அவர்களது செயல் திறனும் கூட குறைந்தே காணப்படுகிறது.

உடல் ஆரோக்கியம் குறித்து விவகாரத்தில் செக்ஸ் வாழ்க்கையில் திருப்தி என்பதும் ஆகர்சனத்தை அடைவதும் முக்கியமானதாக உள்ளதையே இது காட்டுகிறது.

பெண்கள் பொதுவாக ஆர்கசம் குறித்து தங்களது டாக்டர்களிடம் சரிவர விவாதிப்பதில்லை. அதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள் அல்லது வெட்கப்படுகிறார்கள்.



ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 90 சதவீதத்தினர் தாங்கள் ஒருவருடன் உடல்ரீதியான உறவில் இருப்பதாகவும், செக்ஸ் உறவுகளில் பாதியை தங்களது துணைதான் தொடங்கி வைப்பதாகவும் கூறியுள்ளனர். பாலியல் மருத்துவ நிபுணர் டாக்டர் இர்வின் கோல்ட்ஸ்டீன் கூறுகையில்; பெண்களின் ஒட்டு மொத்த ஆரோக்கியம் மற்றும் நலனில் ஆர்கசம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது என்றார்.



# தொப்புள் குத்தும் மோகம்

காது குத்துவது , மூக்கு குத்திக் கொள்வது போல் இப்போது தொப்புள் குத்திக் கொள்வது அதிகரித்துள்ளது.

காது, மூக்கு குத்திக் கொள்ளும் பழக்கம் நகர இளம் பெண்களிடம் அதிக அளவில் காணப்படுகிறது. அதேசமயம், தற்போது தொப்புளில் துளையிட்டுக் கொண்டு அதில் அழகிய ரிங்குகளை மாற்றுவது அதிகரித்து வருகிறதாம்.

தொப்புளில் மாட்டுவதற்கென்றே விதம் விதமான அழகிய ரிங்குகள் நகைக் கடைகளில் குவிந்து கிடக்கின்றன.

அழகு நிலையங்கள் மற்றும் நகைக் கடைகளில் காது , மூக்கு மற்றும் தொப்புள் குத்திக் கொள்வதற்கான வசதிகள் இப்போது பெருகி விட்டன. இது குறித்து காது, மூக்கு , தொப்புள் குத்தும் பொட்டிக் நடத்தும் சி.சுரேஷ் என்பவர் கூறுகையில்; எனது அழகு நிலையத்துக்கு ஏராளமான பெண்கள் வந்து காது, மூக்குக் குத்திக் கொள்வதோடு தொப்புள் குத்திக் கொள்வதிலும் ஆர்வம் காட்டுகின்றனர்.

முன்பு போல இப்போது வலிக்க வலிக்க யாரும் காது, மூக்கு குத்திக் கொள்வதில்லை. இப்போது அது எளிதாகி விட்டது. சிறிய துப்பாக்கி போன்ற சாதனத்தை வைத்துத் தான் நாங்கள் உடலில் துளையிடுகிறோம். அதில் வலி தெரியாது. மேலும் சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் இருப்பதால் எந்தவித தொற்றும் ஏற்படாது.

எனது அழகு நிலையத்துக்கு தினசரி 40 வாடிக்கையாளர்கள் வருகின்றனர். எனது அழகு நிலையத்திலேயே காது, மூக்கு மற்றும் தொப்புளில் மாட்டுவதற்கான அழகழகான வளையங்கள் விதம் விதமான வடிவங்களில் கிடைக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு நகரப் பெண்களிடையே மூக்கு குத்துவது பிடிக்காத ஒன்றாக இருந்தது. ஆனால், இப்போது மூக்குடன் நில்லாமல் தொப்புள் குத்திக் கொள்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்கிறார்.

தொப்புள் குத்திக் கொள்வதில் ஆர்வம் இல்லாத சிலர் தொப்புளைச் சுற்றிலும் பச்சை குத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CM K

# உலகில் நால்வரில் ஒருவர் முஸ்லிம்



உலகில் முஸ்லிம்களின் சனத்தொகை தற்போது 157 கோடி என்று அமெரிக்க ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறது. இந்த கணிப்பீட்டின்படி உலகில் நால்வரில் ஒருவர் முஸ்லிமாக இருக்கிறாராம்.

மத மற்றும் பொதுவாழ்வு தொடர்பான அமைப்பான 'Pew forum on Religion and Public Life' உலகின் 232 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து எடுக்கப்பட்ட சனத்தொகைப் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

உலக முஸ்லிம்களில் 20 சதவீதமானவர்கள் மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் வாழ்கிறார்கள். 60 சதவீதமான முஸ்லிம்கள் ஆசியாவில் வாழ்கிறார்கள்.

லெபனானை விட ஜேர்மனியில் கூடுதலான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஜோர்தானிலும் லிபியாவிலும் சேர்த்து இருக்கின்ற முஸ்லிம்களைவிட ரஷ்யாவில் கூடுதல் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலக முஸ்லிம்களின் தொகை முன்னர் எதிர்பார்க்கப்பட்டதையும் விடக் கூடுதலானதாக இருக்கிறது என்று மேற்படி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வாளரான பிறைன் கிறிம் சி.என்.என்.செய்திக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் இருக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கையில் எதியோப்பியாவிலும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் என்றால் அராபியர்கள். அராபியர்கள் என்றால் முஸ்லிம்கள் என்ற ஒரு சிந்தனை மேற்குலகில் பரவலாக காணப்படுகிறது. மேற்படி அறிக்கையின் மூலமாக அந்தச் சிந்தனை அழிக்கப்படுகிறது என்று பிரின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் துறை உதவிப் பேராசிரியர் அமனி ஜமால் கூறுகிறார்.

இஸ்லாம் பெரும்பான்மையினரின் மதமாக இல்லாத நாடுகளில் 30 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உலகின் மொத்த முஸ்லிம் சனத்தொகையில் 10–13 சதவீதத்தினர் ஷியா முஸ்லிம்கள், 89–90 சதவீதத்தினர் சுன்னி முஸ்லிம்கள், பெரும்பாலான ஷியா முஸ்லிம்கள் ஈரான், பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஈராக்கில் இருக்கிறார்கள்.

ஐரோப்பா 3 கோடி 80 இலட்சம் முஸ்லிம்களுக்குத் தாயகமாக விளங்குகிறது. இது ஐரோப்பிய சனத்தொகையில் 5 சதவீதமாகும். உலக முஸ்லிம் சனத்தொகையில் 2 சதவீதத்துக்கும் அதிகமானவர்களாக ஐரோப்பிய முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.


அமெரிக்கா கண்டத்தில் வாழுகின்ற சுமார் 46 இலட்சம் முஸ்லிம்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் அமெரிக்க நாட்டில் (US) இருக்கிறார்கள். அமெரிக்க சனத்தொகையில் அவர்கள் 0.8 சதவீதத்தினர் மாத்திரமே என்பது கவனிக்கத்தக்கது.

இந்த அறிக்கை உலகம் பூராகவும் முஸ்லிம்களின் சனத்தொகை எவ்வாறு அதிகரிக்கிறது என்பதையும் எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்பதையும் பற்றிய ஆய்வுகளுக்கான அடிப்படையாக அமைகிறது என்று மேற்படி ஆய்வு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவில் 16 கோடி 10 இலட்சம் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். பாகிஸ்தானில் அவர்களின் தொகை 17 கோடி 40 இலட்சம். பங்களாதேஷில் 14 கோடி 53 இலட்சம். சீனாவில் 2 கோடி 17 இலட்சம். இந்தோனேசியாவில் 20 கோடி 29 இலட்சம்.

உலகில் தற்போது 210 கோடி கிறிஸ்தவர்களும் 90 கோடி இந்துக்களும் ஒரு கோடி 40 இலட்சம் யூதர்களும் இருக்கிறார்கள்.

# பெண்களிடம் கூறப்படும் இரகசியங்கள்



பெண்களிடம் ஏதாவது இரகசியத்தைக் கூறினால், 47 மணித்தியாலங்களுக்கும் கூடுதலாக அவர்களில் பெரும்பாலானவர்களினால் அதை இரகசியமாகப் பேணமுடியாமல் போய்விடுகிறதாம்.

பெண்களிடம் கூறப்படும் இரகசியங்கள் பரகசியங்களாவது தொடர்பில் லண்டனில் அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. வைன்ஸ் ஓஃப் சில் என்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த ஆய்வுக்கு 3000 பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் 18–65 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

எவ்வளவுதான் தனிப்பட்டதாகவோ, அந்தரங்கமானதாகவோ அல்லது அசௌகரியமானதாகவோ இருந்தாலும் கூட தங்களால் இரகசியங்களைப் பேணிக்காக்க முடிவதில்லை என்று இந்தப் பெண்களில் 10 பேருக்கு 4 பேர் ஒத்துக் கொண்டிருக்கிறார்களாம். 83 சதவீதமான பெண்கள் தாங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று நம்புகின்ற அதேவேளை, நால்வரில் மூவர் நம்பிக்கைக்கு ஒருபோதும் துரோகம் இழைப்பதில்லை என்று உரிமைகோருகின்றார்கள் என்றாலும் வாயை மூடிக் கொண்டிருக்க தங்களால் முடிவதில்லை யென்று இவர்கள் ஒத்துக்கொள்கிறார்களாம். இந்தப் பெண்களின் நம்பிக்கைக்குரியவர்களாக கணவர், நண்பர், தாய் அல்லது நெருக்கமான நண்பியே விளங்குவதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இரகசியமொன்றைப் பேணிக் காப்பதென்பது மனதுக்குள் ஏதோவொன்றை அமுக்கி வைத்திருப்பது போன்ற உணர்வைத் தங்களுக்கு ஏற்படுத்துவதாகவும் அதனாலேயே அமுக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக இரகசியத்தை வெளியில் விட்டுவிட நேரிடுவதாகவும் சுமார் 45 சதவீதமான பெண்கள் கூறியிருக்கிறார்கள். இரகசியத்தை பரகசியமாக்கியதும் இவர்கள் குற்ற உணர்வு கொண்டவர்களாகத் தங்களை உணருவதாகவும் கூறுகிறார்கள். இரகசியங்கள் அம்பலமாவதற்கு பெருமளவுக்கு மதுபானமே காரணமாயமைந்துவிடுவதாகவும் கூறுகிறார்கள்.


எனவே பெண்களினால் இரகசியங்களைக் காப்பாற்ற முடியாது என்பது இப்போது உத்தியோகபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாக வைன்ஸ் ஓஃப் சில் நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியப் பணிப்பாளர் மைக்கேல் ஃபொக்ஸ் லண்டன் டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

## 47 மணிநேரத்துக்குப் பிறகு அவுட்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபாவில் விபச்சாரம் கூட பல்கலைக்கழக தரத்தில்...?



கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி ஃபிடல் காஸ்ட்ரோ மிகவும் நீண்ட நேரம் பல மணித்தியாலங்களாக உரையாற்றுவதில் பெயரெடுத்தவர். ஏழு... எட்டு மணித்தியாலங்கள் கூட ஒரே அரங்கில் பேசிக்கொண்டிருப்பவர் அவர். ஆவேசமான அரசியல் பேச்சுக்கு மாத்திரம் பெயரெடுத்தவர் அல்ல காஸ்ட்ரோ. மிகவும் நகைச்சுவையாகவும் சாதுரியமாகவும் கூட பேசுவதில் அவர் சமர்த்தர்.

1959 ஆம் ஆண்டு கியூபா புரட்சி வெற்றிபெற்று காஸ்ட்ரோ தலைமையில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பிறகு ஹவானாவில் செய்தியாளர் மகாநாடொன்றில் காஸ்ட்ரோ கலந்துகொண்டு உரையாற்றினார். அதில் பெருந்திரளான வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

காஸ்ட்ரோ உரையாற்றி முடிந்ததும் பத்திரிகையாளர்கள் சரமாரியாக அவரிடம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்.

ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர் எழுந்து ஜனாதிபதி காஸ்ட்ரோவிடம் 'நீங்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு நடத்திய ஆயுதப் போராட்டத்தின் போது உங்கள் கைகளாலேயே 29 பேரைக் கொலைசெய்திருப்பதாக அமெரிக்கப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறதே, அதைப்பற்றி என்ன கூறப்போகிறீர்கள்?' என்று கேட்டார்.

உடனே அதற்கு காஸ்ட்ரோ 'இல்லை, அது ஒரு ஏகாதிபத்தியப் பொய்' என்று பதிலளித்தார். நான் 29 பேரைக் கொலை செய்யவில்லை. அதையும் விட கூடுதல் எண்ணிக்கையானவர்களைக் கொலை செய்திருக்கிறேன். அநேகமாக அந்த எண்ணிக்கை 100 ஐயும் விடக் கூடுதலானதாக இருக்கலாம். உண்மை அவ்வாறிருக்கையில் நான் 29 பேரை மாத்திரம் கொலை செய்ததாக அமெரிக்கப் பத்திரிகை தவறான செய்தி வெளியிட்டிருக்கக் கூடாது. பத்திரிகைகள் உண்மைகளை எழுதவேண்டும்' என்று பதிலளித்தாரே பார்க்கலாம்!

***



ஒரு தடவை ஆர்ஜன்டீனாவுக்கு விஜயம் செய்த காஸ்ட்ரோ தலைநகர் புவனஸ் அயர்ஸில் பல்கலைக்கழக மாணவிகள் மத்தியில் உரையாற்றினார். உரை முடிந்த பின்னர் மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

அக்கலந்துரையாடலின் போது ஒரு மாணவி காஸ்ரோவிடம் 'உங்கள் நாட்டில் பொருளாதாரக் கஷ்டம் காரணமாக பல்கலைக்கழக மாணவிகள் கூட விபச்சாரத்தில் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாகின்றனவே உண்மையா?' என்று கேட்டார்.

அதற்கு எந்தவித தயக்கமும் இல்லாமல் பதிலளித்த காஸ்ட்ரோ, 'ஆமாம் கியூபாவில் விபச்சாரம் கூட பல்கலைக்கழகத் தரத்தில்தான் இருக்கிறது மற்றைய நாடுகளைப் போல அல்ல' என்றாரே!

# சிவாஜி கணேசனால் மறக்க முடியாதது?

ஒவ்வொருவருக்கும் தங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாதவை என்று சில சம்பவங்கள் அல்லது விடயங்கள் இருக்கும். காலஞ்சென்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் மறக்க முடியாததாக இருந்தது எது தெரியுமா?

இறப்பதற்கு ஓரிரு வருடங்கள் முன்னதாக சிவாஜிகணேசனின் நடிப்புலக சாதனைகளைப் பாராட்டுவதற்காக கொழும்பில் பெருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொள்வதற்காக வருகைதந்திருந்த அவர் காலிமுகத்திடலில் அமைந்திருக்கும் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குடும்பத்தினருடன் தங்கியிருந்தார்.



விழாவுக்கு முன்னதாக அதே ஹோட்டலில் செய்தியாளர் மகாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பெருந்திரளான இலங்கை ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

தனது கலையுலக வாழ்க்கை பற்றி செய்தியாளர் மகாநாட்டில் விளக்கமளித்து பல பழைய சுவாரஸ்யமான சம்பவங்களையும் தனது அனுபவங்களையும் கூறிக் கொண்டிருந்த சிவாஜி கணேசனிடம் ஒரு ஊடகவியலாளர் 'உங்கள் வாழ்வில் மறக்க முடியாதது எது?' என்று கேட்டார்.

சில நிமிடங்கள் யோசனை வயப்பட்டவராக மௌனமாக இருந்த கணேசன் சிரித்துக் கொண்டு பதிலளித்தார்.

அவர் அளித்த பதில் இதுதான்;

என் வாழ்நாளில் என்னால் மறக்க முடியாதது எது என்று என்னைக் கேட்கிறீர்கள். நான் 50 வருடங்களுக்கும் மேலாக நாடகத்துறையிலும் சினிமாத்துறையிலும் நடித்துக் கொண்டிருக்கிறேன். எனது எத்தனையோ படங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக என்னை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நானும் தொடர்ந்து நடித்துக் கொண்டேயிருக்கிறேன். நானும் ஓயவில்லை. என்னைப் பார்ப்பதில் நீங்களும் ஓயவில்லை. எனக்கு இப்போது வயதாகி விட்டது. முதுமை அடைந்து விட்டேன். இருந்தாலும் இன்னும் கூட என்னை நீங்கள் பார்ப்பதில் சலிப்படையவில்லையே. (செய்தியாளர் மகாநாட்டில் இருந்த ஒருவரை நோக்கி கையைக்காட்டிய வண்ணம்) அதோ அவர் வாய் மூடாமல் என்னையே ஓன்று பார்த்துக் கொண்டேயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் என்னைச் சலிக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே.... இதைத்தான் உண்மையிலேயே என்னால் மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டனுக்கு நோபல் சமாதானப் பரிசு கிடைக்காததற்கு மொனிக்காவா காரணம்?



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு 2009 நோபல் சமாதானப் பரிசை வழங்குவதற்கு நோர்வேயின் நோபல் கமிட்டி கடந்தவாரம் தீர்மானித்ததையடுத்து அது தொடர்பில் சர்ச்சைகள் கிளம்பிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒபாமாவுக்கு சமாதானப் பரிசை வழங்கியது வேறு விடயம். ஆனால், வேறு யார் யாருக்கு வழங்கியிருக்கலாம் என்றும் அவ்வாறு அவர்களுக்கு ஏன் வழங்கப்படவில்லை என்று காரணம் கற்பித்தும் வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் கர்வத்தனமான அணுகுமுறைகளின் நிராகரிப்பாகவே ஒபாமாவுக்கான நோபல் சமாதானப் பரிசை நோக்க வேண்டுமென்று பல அவதானிகள் கூறுகிறார்கள். ஒபாமாவுக்கு இது வழங்கப்பட்டமை முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும் ஒரு அவமதிப்பாகப் போய்விட்டதாக சில அவதானிகள் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரான கிளின்டனுக்கு நோபல் சமாதானப் பரிசு எப்போதோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வாஷிங்டனில் பேசப்படுகிறது. கிளின்டன் வட அயர்லாந்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கடுமையாகப் பாடுபட்டவர். அத்துடன், அண்மைக்காலத்தில் அமெரிக்காவின் வேறு எந்த ஜனாதிபதியையும் விட மத்திய கிழக்கில் சமாதான உடன்பாடொன்றைக் கொண்டு வருவதற்காக கூடுதலான நேரத்தையும் கிளின்டன் செலவழித்தவர். அந்த முயற்சிகள் வெற்றி பெறாமல் போனது வேறு விடயம்.



வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய பின்னர் எயிட்ஸ் நோய் தொடக்கம் உலகம் வெப்பமயமாதல் வரை பல நெருக்கடிகளைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக கிளின்டன் குளோபல் இனிசேட்டிவ் என்ற அமைப்பை உருவாக்கிப் பாடுபட்டு வருகிறார். ஹெய்டி நாட்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவராகவும் இருந்து கிளின்டன் நல்ல பணிகளை ஆற்றிவருகிறார்.

கடந்த ஆகஸ்டில் கிளின்டன் வடகொரியாவுக்குச் சென்று அந்நாட்டின் கம்யூனிஸ்ட் தலைவர் கிம் யொங் கில்லைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி சிறைவைக்கப்பட்டி

பத்திரிகையாளர்களான லோரா லிங்கையும் இயூனா லீயையும் விடுதலை செய்விப்பதற்கு உதவினார்.

இருந்தாலும் நோபல் கமிட்டி சமாதானப் பரிசை கிளின்டனுக்கு வழங்குவதற்கு யோசிக்காமல் இருந்து வருகிறது. கிளின்டனின் நிருவாகத்தில் உப ஜனாதிபதியாக இருந்த அல்கோருக்கும் (2007 இல்) முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டருக்கும் (2002 இல்) ஏற்கனவே நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் அமெரிக்க ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களே. இப்போது அதே கட்சியைச் சேர்ந்த ஒபாமாவுக்கு அப்பரிசு வழங்கப்பட்டுவிட்டது.

ஒபாமா நிருவாகத்தில் வெளியுறவு அமைச்சராக இருக்கும் கிளின்டனின் மனைவி ஹிலாரி ஒபாமாவுக்கு தனது வாழ்த்துகளைத் தனிப்பட்ட முறையில் தெரிவித்திருக்கிறார். மிகுதியாகப் பேசும் இயல்பு


ஒபாமாவுக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவிக்காமல் மௌனமாக இருக்கிறார்.

ஜனாதிபதியாக இருந்த போது கிளின்டன் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்த மொனிக்கா லிவின்ஸ்கி என்ற அழகிய இளம் பெண்ணுடன் பாலியல் உறவு வைத்துக்கொண்டதையடுத்து உருவான சர்ச்சையும் அதைத் தொடர்ந்து அமெரிக்க காங்கிரஸில் கிளின்டனுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுமே நோபல் கமிட்டி சமாதானப் பரிசை அவருக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்க மறுப்பதற்கான காரணங்களாக இருக்க வேண்டுமென்று வாஷிங்டன் அரசியல் வட்டாரங்களில் சந்தேகிக்கப்படுகிறதாம்.

மொனிக்கா லிவின்ஸ்கியுடனான உறவுக்காக தனது நாட்டு மக்களிடம் கிளின்டன் மன்னிப்புக் கோரினார் என்பது ஞாபகமிருக்கிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யானைக்கை' உயிரினம்



அந்தமான் கடற்கரையில் அதிகம் உலா வரும் 'யானைக் கை ' உயிரினம் மன்னார் வளைகுடாவில் 260 வகை இருந்தும் கண்ணில் தென்படுவதில்லை. மன்னார் வளைகுடாவில் உள்ள கடல்வாழ் உயிரினங்களைப் போல, உலகின் வேறு எங்கும் காண முடியாது. அந்த வகையில் சிறப்பு பெற்றது தான் 'யானைக் கை' உயிரினமாகும். இது 'நாத்திலஸ்' என்ற பழைமையான சங்கு வகையைச் சேர்ந்த உயிரினமாகும். மனிதனின் விரிந்த கரம் அளவுக்கு உருவம் இருக்கும். யானையின் தும்பிக்கை சுருண்டிருப்பதைப் போல உருவ அமைப்பு கொண்டுள்ளதால் இதற்கு 'யானைக் கை' என பெயர் வந்தது. இரவில் மட்டுமே நடமாடுவது இதன் தனிச்சிறப்பாகும். மனிதனைப் போலவே பெரிய கண்கள் இவற்றுக்கும் உண்டு. ஆழ் கடலின் அடியில் இருளில் இருப்பதால் இவற்றுக்கு இந்தக் கண் அமைப்பு உதவியாக இருந்து வருகிறது.

கடலுக்கு அடியில் தேங்கும் கழிவுகளை உண்டு வாழும் இவற்றால் கடலின் சுகாதாரம் பாதுகாக்கப்படுகிறது. மன்னார் வளைகுடாவை பொறுத்தவரை 260 வகை 'யானைக் கை' உயிரினங்கள் உள்ளன. இருந்தும் இப்பகுதியில் தென்படுவதில்லை. இதைக் கடல் ஆமை, பேய் கணவ்வாய் மீன்கள், நட்சத்திர மீன்கள் உணவாக உண்டு வருவதால் இவற்றின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. மற்றபடி மீன்பிடி வலைகளில் இவை சிக்குவது அரிதாகும். அலங்காரப் பொருட்களுக்காக இவற்றின் சங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடலின் பாதுகாப்புக் கருதி மன்னார் வளைகுடாவில் இந்த இனம் பாதுகாக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இவற்றின் எண்ணிக்கை மன்னார் வளைகுடாவில் குறைந்து வரும் நிலையில், அந்தமான் கடற்பகுதியில் 'யானைக் கை' உயிரினம் அதிக அளவில் உலா வருவது தெரியவந்துள்ளது.




## அறிந்துகொள்ளுங்கள்

* 3,000 அடி உயரத்திலும் புறா தன் இருப்பிடத்தை அறிந்து கொள்ளும்.
* புறாக்களில் 130 இனங்கள் உள்ளன.
* போலந்து நாடு புறா வளர்ப்புக்கு புகழ் பெற்றது.
* புறாவை தெய்வீகப் பறவையாக எகிப்தியர்கள் கருதுகிறார்கள்.
* புறாக்களுக்கு ஞாபகசக்தி அதிகம்.
* உலகில் சைக்கிள் உற்பத்தியில் சீனா, இந்தியா, தாய்வான் ஆகிய மூன்று நாடுகள் முதலிடம் வகிக்கின்றன.
* குளோனிங் முறையைக் கண்டுபிடித்தவர் கியான் வில்மட்.
* கங்காரு குட்டி பிறந்ததும் அதன் நீளம் 2.5 செ.மீ. அளவு இருக்கும்.
* போலந்து நாட்டில் உள்ள இரு பள்ளிகளுக்கு மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 03

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | ■ | 7 | 8 | 9 | ■ |
| ■ | 10 | 11 | ■ | 12 | 13 |
| 14 | 15 | ■ | 16 | ■ | 17 |
| 18 | 19 | 20 | 21 | ■ | ■ |
| 22 | ■ | 23 | 24 | ■ | 25 |

**இடமிருந்து வலம்**

1.தமிழகத்திலிருந்து அண்மையில் யாழ். வந்த தூதுக்குழுவிலிருந்த பெண் எம்.பிக்களில் ஒருவர்
5.இலையான்
7.சிலர் நெற்றியில் இடுவது (குழம்பியுள்ளது)
10.மழை,வெயிலுக்கு இது பயன்படும்.
12.ஆயிரம் முட்டையிடுவது
14.சந்திரன் (திரும்பியுள்ளது)
18.அக்கறை என்றும் சொல்லலாம்.
23.ஒவ்வொருவருக்கும் இது உண்டாம் (திரும்பியுள்ளது)
25.குதிரை

**மேலிருந்து கீழ்**

1.வேகம் என்று சொல்லலாம்
3.திருப்பதிக்குப் போனால் இது போடுவார்கள்.
4.இது ஓரிடம் பாவம் ஓரிடம் என்பார்கள் (தலைகீழ்)
9.ஆள்பாதி இது பாதி (தலைகீழ்)
10.யுவதி
13.பேசக்கூடிய பறவையினம்
14.சூரியனிலிருந்து வருவது (குழம்பியுள்ளது)
16.இது அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.
20.சூழ்ச்சி

### குறுக்கெழுத்துப்போட்டி - 01 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1.கடவுள் | 1.கந்தசாமி |
| 6.பந்தம் | 2.படம் |
| 11.பரதம் | 3.தரவு |
| 17.வெள்ளி | 4.பள்ளம் |
| 20.மில்லி | 5.வெள்ளம் |
| 25.நகம் | 18.களிறு |
| | 21.பல் |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**வி.அபிநயா**

**கலைவாணி வித்தியாசாலை வீதி**

**கைதடி மேற்கு**

**கைதடி.**

### பாராட்டுப்பெறுவோர்

01. கே.அரசேஸ்வரன்
கலைமகள் வீதி
நல்லூர் வடக்கு

02. கோ.ரகுவரன்
கந்தரோடை
சுன்னாகம்

03. ஸ்ரீ.சொருபிகா
முள்ளாய் வீதி
வட்டுக்கோட்டை

04. கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்
வட்டுக்கோட்டை

05. ஞா.துவாரகா
மானிப்பாய் வீதி
கைதடி

*உங்கள் விடைகளை 'Saturday மெயில்' இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புங்கள்...*

## சீருடை வரலாறு

மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளிகளுக்கு சீருடைகள் அணிந்து செல்கின்றனர். இப்படி ஏற்றத்தாழ்வின்றி ஒரே மாதிரி சீருடைகளை மாணவ, மாணவிகள் அணிந்தால் தாழ்வுணர்ச்சி யாருக்கும் ஏற்படாது என்ற அடிப்படையில் ஜப்பான் நாட்டுப் பள்ளிகளில்தான் முதன் முதலில் சீருடை அணியும் பழக்கம் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு தான் பிற நாடுகளும் ஜப்பானை பார்த்து சீருடை முறையைக் கொண்டு வந்தன.

## விடுகதைக்கு விடை தேடுங்கள்

1)மணிக்கணக்காய் போடும் கணக்காய் இருந்தாலும்; மனக்கணக்காய் போட்டு விடும் கணக்கு பிள்ளை. அவன் யார்?

2)காடெங்கும் முளைத்த புல்; அறுக்க அறுக்க வளரும். அது என்ன?

3)ஆண்டவனுக்கு கேட்க ஆலயத்தில் ஒலிப்பான்; அவன் யார்?

4)செத்த பிறகே, சந்தைக்கு வருவான்; அவன் யார்?

5)மழைக்கு உதவாத குடை, மழைக்கால குடை.; அது என்ன?

**விடைகள்**

1) கல்குலேட்டர்
2) தலைமுடி
3) கோயில் மணி
4) கருவாடு
5) காளான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய சுவை...**

# கலித்தொகையில் வாழ்வியல் பண்புகள்

முனைவர் இரா.இராமமூர்த்தி

‘கல்வி வலார் கண்ட கலி’ எனப் பாராட்டப்படும் கலித் தொகையில் பல்வேறு வாழ்வியல் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

‘பண்பெனப்படுவது பாடறிந்தொழு குதல்’ என்பது பலராலும் பல நேரங் களிலும் எடுத்துரைக்கப்படுகிறது. இத்தொடர் எங்கிருந்து எடுத்தாளப்ப டுகிறது என்பதைப் பலர் அறிந்திருக்க லாம். சிலர் அறியாமலும் இருக்கலாம். ஆயினும் இக்கருத்து இன்று மிகப் பெரிய ‘மக்கட் பண்பு என்று சொல் லப்படுவது- உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதலாகும்’ என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார் (கலி.133). இத் தொடர் நெய்தற்கலியில் (133) இடம் பெற்றுள்ளது. இதைத்தவிர பல அரிய செய்திகளும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

இக்கலிப்பாவில் (133) ஒன்பது கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இல்வாழ்க்கை நடத்துதல் என்று சொல்வது வறியவர்க்கு உதவுதலாம். ஒன்றைப் பாதுகாத்தல் என்பது கூடி யவரை பிரியாது இருத்தலாம். அன்பெ னச் சொல்லப்படுவது தன் சுற்றத்தா ரைப் பேணிக் காத்தலாம். அறிவெனக் கூறப்படுவது அறியதார் கூறும் சொல்லையும் பொறுத்துக் கொள்ளு தலாம். ஒருவரோடு ஒருவர்க்குள்ள உறவென்பது கூறிய சொல்லை மறுக் காமல் காத்தலாகும். நிறையென்று சொல்லப்படுவது மறைவான செய லைப் பிறர் அறியாது ஒழுகுதலாகும். முறையென்று சொல்லப்படுவது நம் மவரெனக் கண்ணோடாது குற்றத்திற் கேற்பத் தண்டனை வழங்குதலாகும். பொறுமையெனச் சொல்லப்படுவது பகைவரைக் காலம் வரும் வரையில் பொறுத்துக் கொள்ளுதலாகும்.

மேலே கூறிய கருத்துகளை இன் னும் சற்று விரிவாகப் பார்த்தல் நலம் ‘ஆற்றுதலென்பது அலந்தவர்க் குதவு தல்’ இதனை

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்**
**கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான்**
**துணை, (42)**

எனத் திருக்குறள் தெளிவுற வழி காட்டியுள்ளது. போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை இத்தொட ரின் கருத்தினைச்

**‘செல்லாமை உண்டேல் எனக்**
**குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை’**

என்ற பிரிவாற்றாமையில் அமைந் துள்ள குறள் தெளிவுபடுத்துதலை அறியலாம். பிரிவு இன்னாதது என்ப தனை இன்னா தனியார்பிரிவு (1158) என்ற வள்ளுவம் தெளிவாக உரைக் கும் பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல் இதனைத் திருவள்ளுவர்

**‘நண்பாற்றா ராகி நயமில செய்**
**வார்க்கும் பண்பாற்றார் ஆதல்**
**கடை’ (998)**

என எடுத்தோதுவார். ‘அன்பெ னப்படுவது தன்கிளை செறாஅமை’ இக்கருத்தினை உள்வாங்கிக்கொண்ட வள்ளுவப் பேராசான் உறவினரைத் தழுவி வாழும் வழியாகப்

**‘பெருங்கொடையான்**
**பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத்தில்**
**(526)**

என எடுத்துரைப்பார். இதனைய டுத்து ‘அறிவெனப்படுவது பேதை யார் சொல்நோன்றல்’ எனச் சுட்டும் கலி இக்கருத்தினை

**‘எப்பொருள் யார்யார் வாய்க்**
**கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பதறிவு’**
**(423)**

என வழிமொழிந்துரைப்பார் வள்ளு வர். தெளிவெனப்படுவது கூறியது மறாஅமை என்ற கலித்தொகைச் செய்யும் கருத்தைத் ‘நின்ற சொல்லர்’ (நற்றிணை:1) எனக் கபிலர் கூறுவார். இக் கருத்தினை

**‘ஊழி பெயரினுந் தாம்**
**பெயரார் சான்றாண்மைக்**
**காழி யெனப்படுவார்’**

எனக் குறள் சுட்டுகிறது. நிறையெனப் படுவது மறை பிறரறியாமை என்ற கருத் தைக் காமத்துப் பாலில் நிறை யழிதல் என்னும் அதிகாரத்தில் தலைவி கூற்றாக வள்ளுவர்

**‘நிறையுடோன் என்**
**பேன்யன் யானோ வென்**
**காமம்**
**மறையிறந்து மன்றுப**
**டும்’ (1254)**

முறையெனப்படுவது கண்ணோடா துயிர்வெளவன் இதனைச் செங்கோன்மை அதி காரத்தில்

**‘ஓர்ந்துகண்ணோடா**
**திறைபுரிந்தியார்மாட்டும்**
**தேர்ந்து செய்வஃதே**
**முறை’ (541)**

என்ற குறட்பாவால் குறிப்பி டுகிறார் இறுதியாகப் பொறை யெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் என்னும் கருத் தினைக் கலித் தொகை கூறும். இதனைப் பொறையுடைமையின் முதல் குறட்பா மிகத் தெளிவாகச் சுட்டுதலைக் காணலாம் அக் குறட்பா

**‘அகழ்வாரைத் தாங்**
**கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார் பொறுத்தல்**
**தலை’ (151)**

என்பதாகும். மேலும், வன் மையுள் வன்மை மடவார்ப் பொறை எனவும் திருவள்ளு வர் கூறுவார். நாலடியாரும் எல்லாம் ஒறுக்கும் மதுகை உரனுடையாளன் பொறுக்கும் பொறையே பொறை எனப் பொறைக்கு இலக்கணம் வகுப்பார்.

இவ்வாறு வாழ்வியல் நெறிகளுக்கான பண்புகளைத் தொகுத்துச் சுட்டியுள்ளார் நெய்தற்கலி ஆசிரியர் நல்லத் துவனார். அவரது பாடலுக்கு திருக்குறள் வழி விளக்கம் கண்டோம் அப்பாடல் வரு மாறு

**‘ஆற்றுதல் என்பதொன்**
**றலந்தவர்க் குதவுதல்**
**போற்றுதல் என்பது**
**புணர்ந்தாரைப் பிரி**
**யாமை**
**பண்பெனப்படுவது**
**பாடறிந் தொழுகுதல்**
**அன்பெனப்படுவது**
**தன்கிளை செறாஅமை**
**அறிவெனப்படுவது**
**பேதையார் சொல்நோன்**
**றல்**
**செறிவெனப்படுவது**
**கூறியது மறா**
**அமை**
**நிறையெ**
**னப்படுவது**
**மறைபிற**
**ரறியாமை**
**முறையென்படுவது**
**கண்ணோடாதுயிர்வெ**
**வல்**
**பொறையெனப் படு**
**வது போற்றாரைப்**
**பொறுத்தல்**
**(கலி133)**

மேலே காட்டிய ஒன்பான் செய்திகளும் ஒன்பான் மணி களாகப் போற்றிப்பாதுகாக்கப் பட வேண்டியன. இத்தகைய நற்கருத்துகள் நம் தமிழி லக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இம்மா மணிகளை ஓதியுணர்ந்து நல்வாழ்வை மேம்பாடுறச் செய்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி வாழ்த்துகள்



## கமலுக்கு ஜோடியாக தமன்னா

கமல்ஹாஸனுக்கு ஜோடியாக நடிக்கப் போகிறாராம் தமன்னா... இது தான் இப்போது கோடம்பாக்கத்தின் சூடான செய்தி. 18 வயதாகும் தமன்னா, மேஜரா வதற்கு முன்பே தமிழ் சினிமாவில் முன்னணி நாயகிகளை ஓரம்கட்டிவிட்டு முதலிடத்துக்கு வந்துவிட்டார். இப்போது பெரிய நடிகர்க ளின் விருப்பமான நாயகியாக மாறி விட்டார். பரத், ஜெயம்ரவி, விஜய் என அவரது ஆட்டம் களைகட் டிவிட்டது. இந்த நிலையில், அவருக்கு கமலுடன் நடிக்கும் வாய்ப்பு வந்துள்ளதாம். கே.எஸ்.ரவிக் குமார் இயக்கவிருக்கும் கமலின் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறாராம் தமன்னா. கமல் படமாச்சே... முத்தக்காட்சி இருக்குமா என்று தமன்னா கேட்க, அது இல்லாமலா என்று பதில் வந்ததாம். 'அப்படின்னா என் ரேட்டே வேற' என்ற ரீதியில் பேசிய தமன்னா, ரூபா 1.25 கோடியை சம்பளமாகக் கேட்க, 'இவ்வளவு பெறுமதியான முத்தம் தேவையா' என யோசித்து வருகிறாராம் ரவிக்குமார்.



விண்ணைத்தாண்டி வருவாயா படத்துக்குப் பிறகு நிக் ஆர்ட்ஸ் சக்ரவர்த்தி தயாரிப்பில் வாலிபன் படத்தில் சிம்பு நடிக்கி றார்.படத்தை இயக்குவதும் அவரே. வாலிபனில் யார் சிம்பு ஜோடியாக நடிப்பது என்பது இன்னும் விடை தெரியாத கேள்வி. ஸ்ருதிஹாசன் பெயர் முதல் வரலட்சுமி பெயர் வரை அரை டஜன் நடிகைகள் பரிசில னையில் உள்ளனர். இந்நிலையில் உன்னைப்போல் ஒருவனில் ரிப்போர்ட்டராக நடித்த அனுஜா அய்யரை வாலிபனில் சிம்பு நடிக்க வைக்க இருப்பதாக செய்தி கசிந்துள்ளது. படத்தில் அனுஜா அய்யர் நாயகியாக நடிக்கவில்லை. மாறாக முக்கி யமான வேடத்தில் நடிக்கிறார் என அந்தச் செய்தி மேலும் கூறுகிறது. விண்ணைத் தாண்டி வருவாயா முடியும்வரை அடுத்தபடம் குறித்து பேசப்போவதில்லை என சிம்பு தீர்மானித்திருப்பதால் அனுஜாவின் விடயம் உறுதி செய் யப்படாமல் வதந்தியாகவே காற்றில் உலவிக் கொண்டிருக்கிறது.

## சம்போ... சிவசம்போ...

தமிழில் நாடோடிகளாக வெளியாகி சக்கை போடு போட்ட படம் தெலுங்கில் சம்போ சிவசம்போவாக உருவாகி வருகிறது. நாடோடிகள் படத்தில் நாயகன் சசிக்குமாரின் மாமா மகளாக வந்த அனன்யா, சம்போ சிவசம்போவில் நடிக்கவில்லை. அவருக்கு பதிலாக அந்த வேடத்தில் நடிக்க ப்ரியாமணியை ஒப் பந்தம் செய்திருக்கிறார்கள். தமிழ் நாடோடிகளில் பாவாடை தாவணி அணிந்து அனன்யா செய்த சேட்டைகளையெல்லாம் தெலுங்கு நாடோடிகளில் செய்ய தயாராகி வரும் ப்ரியாமணி, பொலிவூட் சினிமாவுக்கும் தயா ராகிவிட்டார்.



'தம்பிக்கு இந்த ஊர்'
பரத் - மடால்ஷா

இப்போது கவர்ச்சியும் எடுபடாமல், நடிப்பும் பிடிபடாமல் அலைபாய்ந்து கொண்டிருந்த நிக்கோல், சொந்த ஊருக்கே போய்விட்டார். சிசி இந்தப் பழம் புளிக்கும் கதை தான் இப்போ படிப்பும் போச்சு, நடிப்பும் போச்சு!

## ஜெயம்ரவியை இயக்கும் பிரபுதேவா

இந்திப் படங்களை இயக்க வாய்ப்புகள் வரிசைகட்டி நின்றாலும், பிரபுதேவா அடுத்து இயக்கப் போவது ஒரு தமிழ்ப் படத்தை என்கிறார்கள். அந்தப் படத்தை தயாரிப்பவர் ஏ.ஜி.எஸ். என்டர்டெயின்மெண்ட் கல்பாத்தி எஸ்.அகோரம். இவரது தயாரிப்பில் விஷால் நடிக்கும் படத்தை பிரபுதேவா இயக்குவதாகத்தான் முதலில் கூறப்பட்டது. விஷால், பாலா இயக்கும் படத்துக்கு கால்ஷீட் கொடுத்துள்ளதால் அவருக்குப் பதில் ஜெயம் ரவியை ஒப்பந் தம் செய்யவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜெயம் ரவி தெலுங்கு 'கிக்' படத்தின் ரீமேக்கான தில்லாலங்கடியில் தற்போது நடித்து வருகிறார். அடுத்து அமீரின் கண்ணபிரானில் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saturday சினிமா




## இதயங்களைத் துள்ள வைத்த ஸ்ரீதேவி

‘இளமை எனும் பூங்காற்று...’ இந்தப் பாடலை யாரும் மறந்திருக்க முடியாது. அந்தப் பாடலில் கண்ட ஸ்ரீதேவி, இரசிகர்கள் கண்களிலிருந்து இன்னும் அகலவில்லை. இன்னும் அதே இளமையுடன், இன்றைய இளம் நடிகைகளுக்கு கடும் பிரமிப்பை ஏற்படுத்தும் வகையிலான ஸ்ரீதேவியை சில நாட்களுக்கு முன்பு மும்பையில் இரசிகர்கள் பார்த்து வியந்து போயினர். அது எச்.டி.ஐ.எல். இந்தியா கோட்டூர் வாரம் எனப்படும் நகைகள் மற்றும் பேஷன் விழாவின் ரேம்ப் வாக் நிகழ்ச்சி. எத்தனையோ அழகிகள் வண்ணமயமான உடைகளுடன் நடைபோட்டனர். ஆனால், அத்தனை பேரையும் தூக்கி சாப்பிட்டவர் ஸ்ரீதேவி மட்டும்தான். அட்டகாசமான உடையில், ‘16 வயதினிலே’ படத்தில் பார்த்த அதே மாறாத அழகுடன் ஜம்மென்று நடந்து வந்த ஸ்ரீதேவியைப் பார்த்து அத்தனை பேரும் கண்கள் வியப்பில் விரிய கைகளைத் தட்டியபடி ரசித்தனர். ஸ்ரீதேவி நடந்து முடிந்து போகும் வரை கைதட்டல் நிற்கவில்லை. கருப்பு நிற கௌனில் படு ஸ்டைலாக, அழகாக வந்த ஸ்ரீதேவி, அத்தனை பேரின் இதயங்களையும் ஒரே ஸ்டிரைக்கில் துள்ள வைத்து விட்டார்.

## கன்னடம் போன நயன்

மலையாள படவுலகில் அறிமுகமானபோது 60 ஆயிரம் கூட சம்பளம் வாங்காத நயன்தாரா, தமிழிலும் தெலுங்கிலும் கொடிகட்டி பறந்து ஒருகோடிக்கு மேல்சம்பளம் வாங்கினார். இப்போது மலையாளம், தமிழ், தெலுங்கு மொழிகளைத் தொடர்ந்து கன்னடத்திற்கு போயிருக்கும் அம்மணிக்கு அங்கு 60 இலட்சம் சம்பளமாம்.ரொம்பவும் சிறிய பட உலகமான கன்னட பட உலகில் இத்தனை சம்பளம் நயனுக்கு தரக்காரணம் கன்னடரான பிரபுதேவாவின் காதலி நயன் எனும் மதிப்புத் தான் என்பதை சொல்லவும் வேண்டுமா.



## சிம்புவுக்கு அருகில் நயன் வெளியேறிய பிரபுதேவா

பெப்சி தொழிலாளர்களின் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்தார் நயன்தாரா. இவரது போதாத நேரமோ என்னவோ லேட்டாக வந்த நயனுக்கு சிம்புவின் பக்கத்தில் உட்காரத்தான் இடம் கிடைத்தது. இதுக்கு முன்னாடி ஒருமுறை திரையுலகினர் உண்ணாவிரதம் நடத்தின போதும் சிம்புவுக்கு இங்குதான் இடம் கிடைத்தது. அப்போதும் கொஞ்சம் முன்னேறி அவரது மனசில இடம்பிடிக்க முயற்சி பண்ணிய சிம்புவுக்கு கிடைத்தது ஏமாற்றம்தான். இந்த முறை அப்படியெல்லாம் அவர் முயற்சிபண்ணவேயில்லை.வெந்தபுண்ணுட் வெங்காயத்தை பிழிவா னேன் என்று அமைதியாக இருந் துவிட்டார். பதிலுக்கு நயன்தாராவும் அமைதியாக இருந்து விட்டாராம். ஆனால்,நயன்தாராவின் வரவில் அதிர்ந்து போனது பிரபுதேவாதான். தனது குடும்பத்தினருடன் இந்த விழாவுக்கு வந்திருந்த பிரபுதேவா நயன்தாராவை பார்த்ததும் விருட்டென்று எழுந்து வெளியேறிவிட்டார். ஒருவேளை இருவரும் அருகருகில் இருப்பது மாதிரி யாராவது படம் எடுத்துவிட்டால் அதற்கு பின்பு எழுகிற சர்ச்சையை சமாளிப்பது யாராம்? அதனால்தான் இந்த உஷார். திருட்டு மாங்காயா இருந்தாலும் இருட்டின பிறகு கல்லெறிவது தானே புத்திசாலித்தனம்?



தீபிகா படுகோனே

## கவர்ச்சியாக நடிக்க ஆசை

குடும்பப்பாங்கான வேடங்களில் மட்டுமே நடித்து ரசிகர்களை வசீகரித்து வரும் நடிகை ரம்யா நம்பீசனுக்கு கவர்ச்சியாக நடிக்க ஆசையாம். இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டியில்;

நான் தொடர்ந்து குடும்பப்பாங்காக நடித்துவருகிறேன். எனக்கு கவர்ச்சியாக நடிக்க ஆசைதான். ஆனால், அப்படியொரு வாய்ப்புக் கிடைக்கவில்லை. தமிழில் பக்கா கமர்ஷியல் படத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். நல்ல உணவுப்பழக்கமும், உடற்பயிற்சியும் இருந்தால் உடம்பு நம் சொல்படி கேட்கும் என்று டிப்சும் கொடுக்கிறார் ரம்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# ஹிலாரி கிளின்டன்

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் நடைபெற்ற மோதல் நடவடிக்கைகளின் போது பாலியல் வல்லுறவு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதென்ற கூற்றினால் தோன்றியுள்ள சர்ச்சைகள் இன்னமும் முற்றுப் பெறாத நிலையில் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கிளின்டன் ஐரோப்பிய நாடுகளுக்கான 5 நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தொடரில் உரையாற்றிய ஹிலாரி, இலங்கை உட்பட்ட சில நாடுகளில் பாலியல் வல்லுறவு ஒரு போராயுதமாக பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

இக்கருத்தின் உண்மைத் தன்மை ஒரு புறமிருக்க இலங்கை மீது சுமத்தப்பட்ட காத்திரமான குற்றச்சாட்டாக ஹிலாரியின் இக்கருத்து வெளிப்பாடு அமைந்துள்ளது.

இலங்கை போர்க்குற்றம் இழைத்திருப்பதாக சர்வதேச அளவில் எழுந்துள்ள சர்ச்சையை ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை புறக்கணித்துள்ள நிலையில் ஹிலாரி அசத்தலான துணிச்சலுடன் இக்கருத்தை முன்வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்திருந்த நிலையில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆகியன ஹிலாரியின் கூற்றை விளக்கியிருந்தன.

ஆனாலும் இவ்விடயம் தொடர்பில் ஹிலாரி தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியதாக இல்லை.

இச்சர்ச்சைகள் முற்றுப்பெறாத நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கான அச்சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக சுவிற்சர்லாந்துக்கு சென்றிருந்த ஹிலாரி முன்னிலையில் துருக்கிக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

துருக்கிக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையிலான பொது எல்லையை திறப்பதும் இருதரப்பு வர்த்தக உறவுகளை பலப்படுத்துவதுமே இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களாகும்.

ஆனால், இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையானது பிராந்திய நாடுகளுக்கு கடும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென அசர்பைஜான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது ஐரோப்பிய விஜயத்தின் ஒரு கட்டமாக ரஷ்யாவுக்கு சென்றுள்ள ஹிலாரி, அங்கு உயர் மட்டச்சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

ஈரானின் அணுவிவகாரம் தொடர்பாக அந்நாட்டசு வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிக்காவிடில் ஈரான் மீது மேலும் தடைகள் விதிக்கப் போவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறிவருகிறது.

ஆனால், ஹிலாரியின் ரஷ்ய விஜயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்தே மொஸ்கோவால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஈரான் மீதான தடைகளை மேலும் அதிகரிப்பது எதிர்மறையான விளைவுகளையே தோற்றுவிக்குமென ரஷ்யா ஹிலாரியிடம் தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு மற்றொரு அணு ஆயுத நாடான ரஷ்யாவின் கருத்து பதிலடி தரும் கருத்தாகவோ ஈரானுக்கு ஆதரவு தரும் கருத்தாகவோ அமைந்துள்ளது.

ஈரானுக்குகெதிராக ரஷ்யாவை திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஹிலாரியின் இவ்விஜயமானது தோல்வியில் முடிவடைந்ததாகவே அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கை தொடர்பான குற்றச்சாட்டு, துருக்கி-ஆர்மேனிய உடன்படிக்கைக்கு அசர்பைஜான் எதிர்ப்பு, ஈரானின் அணு விவகாரம் தொடர்பான ரஷ்யாவின் நிலைப்பாடு ஆகிய மூன்று விடயங்களையும் எடுத்துப்பார்த்தால் ஹிலாரியின் செயற்பாட்டுக்கு ஏகோபித்த ஆதரவோ, சாதகமான பதில்களோ கிடைப்பதாக இல்லை.


அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறி ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதிராகப் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டனை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளிவிவகாரச் செயலராக நியமித்துள்ளார்.

ஆனால் ஹிலாரியின் அண்மைக்கால விஜயங்களும் கருத்துக்களும் வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றதாக இருக்கவில்லை.

இந்நிலையில், முன்னாள் அமெரிக்க முதற் பெண்மணியும் தற்போதைய வெளிவிவகாரச் செயலாளருமான ஹிலாரியின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு மாற்றமடையப்போகின்றது என்பது நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அவலி' சேர்ந்த தீபங்களுக்கு...

தீபங்களே
நீவிர் வரிசையிட்டது
ஒளிர்வதற்காகவா?
ஒளிர்ந்த தீபங்கள்
மங்கல் கொண்டன
எங்கள் கண்ணீரின் மறைப்பில்

சொந்தமெல்லாம்
முள்வேலிக்குள்ளே
சோகமெல்லாம்
எம் நெஞ்சக்குள்ளே

காட்சிப் பொருளாய்
எங்கள் உறவுகள்
இவரின் கதறல்கள்
அவர்க்கு உரமாகுது

தொப்புள் கொடிகள்
வந்து போயின
எம்மைப் பார்த்து
நடித்து அசத்தின

அறிக்கைகளிலே
இனி வீரங்காட்டுவார்!
அதனைவிட்டால்
எதில் தம் தீரம் காட்டுவார்?

அரக்கன் அழிந்தகாலன்று
தீபங்கள் வரிசை கொண்டன
தீபங்களே இன்று நீவிர்
வரிசை கட்டியதெதனாலோ?

மலக்கழிப்பிற்கும்
வரிசை கட்டிறார்
அலைக்கழிப்பினால்
அவதி கொள்கிறார்

சாதனை செய்த
மக்கள்
வேதனை சுமக்கிறார்

எதிர்காலம்
இருளில் என்றே
ஏக்கம் கொள்கிறார்

ஏரெடுத்து
நிலங்கிழித்து
போரடித்த மண் எங்கே?

படகேறி
நீர் கிழித்து
மீனள்ளிய கடல் எங்கே?

வாழை, பலா, கமுகென்றே
சோலையாய்ச் சூழ்ந்த
வீடெங்கே?

அத்தனையும் தானிழந்து
நாதியற்றுப்போய்
அகதியாயெம்
உறவுகள் வாடயிலே

தீபங்களே;
நீவிர் வரிசையிட்டது
ஒளிர்வதற்காகவா?

ஒளிக்காகத்தான்
காத்துள்ளோம்
உலக பேரொளிக்காய்...

கதிரோன்

# ஒரு அகதியின் ஆதங்கம்



கடந்த காலங்களும்
கலைந்த நினைவுகளும்
காணாமல் போனது
நாட்களை நகர்த்தியபடி...

இயல்பு நிலையும்
இழந்து போக...
இங்கிதங்கள்
இம்சைக்குள்
குடிபுகுந்தது

சுகங்களின் சூட்சுமங்கள்
சுமைகளுக்குள்
இடம்பெயர்ந்ததால்
வலிகளும் பலிகளும்
முட்கம்பிகளுக்குள்
முடங்கிப்போனது...

எம்மூரின் எண்ணங்களை
அசைபோட்டு...
நினைவுகளை மீட்டுகின்றோம்
சின்னச் சின்ன ஆசைகளை
சிறையினில் பூட்டி
பழகிய நாட்களும்
விலகிய உறவுகளும்
பாதியிலே எமைப்பிரிந்ததும்
ஏனோ?

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்




# இனிதான நன்னாள்

மலர்கொண்டு மனம்காண
மகிழ்ந்திடும் நாளிதனில்
மணமுடிப்போம் எனையாள
எங்கிருந்து வந்தனையே
இனிமையான அகமதனில்
இணைந்திடும் தீபத்திருநாளில்
ஒளிகொண்டு ஏற்றுவோம்
இனிதான நாளிதனை
நினைவுகளுடன்

கந்த.ஞானமுத்து
கைதடி மேற்கு-02



# கனவுலகு

நத்தையின் கனவில்
நாணைய தளிர்கள்

தேனீயின் கனவில்
விரியும் மொட்டுக்கள்

மானின் கனவில்
புல்மேயும் புலிகள்

பூனையின் கனவில்
நட்புடன் எலிகள்

நாயின் கனவில்
நிமிர்ந்த வால்கள்

என்.றணா
கொக்குவில்

# அதிர்ச்சி

என்
காதல் தோட்டத்தில்
திடீரென...
ஒரு ஒற்றை ரோஜாவின்
ஜனனம்..
எட்டிப் பார்த்தபோது
அது என்
இதயத்தின் மரணம்...

சா.ரமேஸ்குமார்
மீசாலை-கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 இலட்சத்தில் ஒருவராகலாம்

புகைக்கும் ஒருவர் சிகரெட்டுக்கு மட்டும் தீ மூட்டவில்லை. தமது ஆயுளுக்கும் சேர்த்தே தீ மூட்டுகிறார். சிகரெட் எவ்வளவு வேகமாக சாம்பலாகிறதோ அதை விடவும் வேகமாக அதைப் புகைப்பவரின் ஆயுளும் குறைந்து கொண்டேவருகின்றது. இவ்வாறு எவ்வளவுதான் எச்சரிக்கைகளை விடுத்தாலும் புகைப்பவர்களுக்கு இதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றது தான்.

இன்று பெரியவர்கள் மட்டுமன்றி சிறியவர்கள் கூட புகைத்தலுக்கு அடிமையாகி விட்டனர். சிகரெட் புகைப்பது ஒரு நாகரிகமான செயல் என்ற கொள்கை இளையோர் மத்தியில் ஆழமாக பதிந்துள்ளது. இதனால் அவர்கள் புகைத்தலின் பின் விளைவுகள் குறித்து எதுவுமே சிந்திப்பதில்லை. இதேவேளை புகைத்தலுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றார்கள். புகைத்தலை விட நினைத்தால் கூட அவர்களால் அது முடிவதில்லை.

எனவே புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கான சில வழிகளை இங்கு பார்க்கலாம்.

முதலாவதாக, இனி வாழ்நாள் முழுவதும் புகைக்கவே கூடாது என்றெல்லாம் சபதம் போடாதீர்கள். இன்று ஒருநாள் புகைக்காமல் இருந்து பார்க்கப் போகிறேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஒருநாள், ஒருநாள் என்று நீட்டிக்கொண்டே ஒரு வாரத்தை கழித்து விட்டீர்களானால், பிறகு புகைக்காமல் இருப்பது எளிமையாகிவிடும். அதேபோல். கொஞ்சம் கொஞ்சமாகக்குறைக்கலாம் என்று நினைக்காதீர்கள். அதனால் பலன் எதுவும் கிடைக்காது. அடியோடு நிறுத்துவதுதான் பலனளிக்கும். முதல் முறையே விட முடியவில்லை என்றால் சோர்வடைந்து முயற்சியைக் கைவிட வேண்டாம். விடா முயற்சி நிச்சயம் வெற்றியைத்தரும்.

காலையில் எழுந்தவுடன் கண்ணாடியைப் பார்த்து, நான் இன்று புகைக்கப் போவதில்லை. என்று சில முறை சொல்லிக்கொள்ளுங்கள். வேண்டுமென்றால் உங்கள் குடும்பத்தினரிடமும் நண்பர்களிடம் தம்பட்டம் அடித்துவிடுங்கள். நண்பர் அல்லது உறவினரிடம் இந்த திகதியில் நான் புகைப்பதை முற்றிலும் நிறுத்திவிடுவேன் என்று சவால் விடுங்கள். புகைக்காகச் செலவிடும் தொகையைத் தனியாக சேமித்து வையுங்கள். நினைவு வைத்துக்கொள்ளுங்கள். எப்போதாவது தவறி மீண்டும் புகை பிடித்துவிட்டால். பெரிய தவறு செய்துவிட்டதாகக் குமைந்தும் போக வேண்டாம். அதேநேரம், சபதத்தைத் தான் ஒரு முறை மீறிவிட்டோமே என்னும் அலட்சியத்தால். மீண்டும் தொடர்ந்து புகைக்கும் பழக்கத்தில் சிக்கிக் கொள்ளவும் வேண்டாம்.

புகைப் பிடிக்கத் தடை விதித்திருக்கும் இடங்களை மட்டுமே பொழுது போக்கிற்குத் தேர்ந்தெடுக்கவும். நூலகங்கள், கோயில்கள், குளிரூட்டப்பட்ட திரையரங்குகள் முதலிய இடங்களுக்குச் செல்கையில் புகைபிடிக்க வேண்டும் என்ற தூண்டுதல் தோன்றாது. புகைப்பிடிப்பதை விட வேண்டும் என்று நினைக்கும் நாளில் உங்கள் சிகரெட்டுகள், தீப்பெட்டி, லைட்டர் ஆகிய அனைத்தையும் தூக்கி எறிந்துவிடுங்கள். கொஞ்ச நாட்கள் உங்கள் நண்பர்களில் புகைப்பிடிக்கும் பழக்கமற்றவர் எவரோ அவருடன் மட்டும் உணவருந்தவோ, வெளியில் செல்லவோ செய்தீர்களானால், உங்கள் புகைக்கும் ஆர்வம் தூண்டப்படாது. மாறாக, புகைப்பழக்கமுடையவருடன் இருந்தீர்களானால், அவர் புகைக்கையில் உங்களுக்கும் புகைக்கவேண்டும் என்ற ஆவல் தோன்றுவது இயற்கை தானே?

புகைப்பழக்கத்தை நிறுத்த நீங்கள் குறித்திருக்கும் நாளில், ஒரு பல் மருத்துவரிடம் சென்று உங்கள் பற்களில் படிந்துள்ள நிகோடின் கறையை நீக்கி பற்களை சுத்தம் செய்து கொண்டு வாருங்கள். உங்கள் வாயை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருங்கள். ஒவ்வொரு முறை உணவருந்திய பின்னும் பல் துலக்குங்கள் Mouth refreshner உபயோகியுங்கள் புகை பிடிக்கும் ஆர்வம் தன்னால் மங்கிவிடும்.




வாய்க்கும் கைக்கும் ஏதாவது ஆரோக்கியமான வேலை கொடுத்துக்கொண்டே இருங்கள். இரு சக்கர வாகனம் ஓட்டுவது, மெல்ல ஓடுதல், நீச்சல், பந்து விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுகையில் உங்களால் நிச்சயம் புகைக்க முடியாது. கரட், உலர் பழங்கள், கொட்டை வகைகள், இனிப்பு இல்லாத சுவிங்கம் முதலியவற்றை மெல்லுங்கள்.

அடிக்கடி குளிர்ந்த தண்ணீர், பழச்சாறு முதலியவற்றை அருந்துங்கள். சோடா,கோப்பி,தேநீர் முதலியவற்றைத் தவிர்க்கவும். இவற்றில் உள்ள காபின் என்ற நச்சுப்பொருள் புகைக்கும் உணர்வைத் தூண்டுகிறது.

சிகரெட் பற்றவைக்க வேண்டும் என்ற ஆவல் எழுகையில் தீக்குச்சியைக் கிழியுங்கள். நறுமணமிக்க மெழுகுவர்த்திகள் தற்பொழுது நிறையக் கிடைக்கின்றன. அவற்றை அறையில் ஏற்றி வையுங்கள். அல்லது தீக்குச்சியை உரசிவிட்டு ஆழ்ந்து ஒருமுறை மூச்சு விடுங்கள்.பின் மெல்ல ஊதி அந்தத் தீக்குச்சியை அணைத்துவிடுங்கள். நறுமணமிக்க மலர்களை வாங்கி உங்கள் பூச்சாடியில் வையுங்கள். அதன் வாசனையை அனுபவியுங்கள். அந்த இடத்தில் புகைக்கத் தோன்றாது.

கூடியவரை தனிமையிலோ அல்லது புகைப்பழக்கமுடையவர்கள் மத்தியிலோ இருப்பதைத் தவிர்க்கவும். மனைவி,குழந்தைகளுடன் அதிக நேரம் செலவழியுங்கள். அலுவலகத்திலும் அதிக வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யுங்கள். அல்லது ஏதாவது புதிதாய்க் கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்குங்கள். உங்களுக்குப் பிடித்த விளையாட்டு அல்லது பொழுது போக்கு,தோட்ட வேலை முதலியவற்றில் கவனம் செலுத்துங்கள். சுருக்கமாகச் சொன்னால் புகைக்க வேண்டும் என்ற எண்ணமே உண்டாகாத அளவு பரபரப்பாக இருக்கவும் ஓய்வு நேரத்தை முன் கூறியவாறு குடும்பத்தாருடன் சேர்ந்து கொண்டாடுங்கள்.

கைகளில் சிகரெட்டைப் பிடித்திருப்பது போல் உணர்வு தோன்ற வேண்டும் என்றால் ஒரு பென்சில், பேனா இவற்றை விரலுக்கிடையில் வைத்து உருட்டியவாறு இருங்கள்.

புகைப்பிடிப்பதை நிறுத்தியவுடன் உடலில் சில எதிர்ப்புணர்வுகள் தோன்றும். அவற்றை Withdrawal Symptoms என அழைப்பர். அதனை ஏன் னென்ன, அவற்றை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்வோம்.

வாய் உலர்த்தல், வாய்ப்புண் முதலியவை தோன்றினால் சில்லென்ற குளிர்பானம் அருந்துங்கள் அல்லது சுவிங்கம் மெல்லுங்கள். இது அதிக அளவு எச்சிலைச் சுரக்கச் செய்கிறது. தலைவலியோ தூக்கமின்மையோ இருக்குமானால் நல்ல வெதுவெதுப்பான நீரில் குளித்துவிட்டுத் தியானம், மூச்சுப் பயிற்சி இவற்றைச் செய்யுங்கள். உங்கள் மனநிலை அமைதியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். அயர்வாகவோ களைப்பாகவோ உணருகையில் ஒரு குட்டித்தூக்கம் போடுங்கள். இருமல் தோன்றுமானால் மூலிகைத் தேநீர் அருந்துங்கள். புகைக்காமையால் பதற்றம் உண்டானால் மெல்லச் சற்று நேரம் உலவுவதோ உங்களுக்குப் பிடித்த விடயத்தில் மனதைத் திருப்புவதையோ செய்யுங்கள். புகைப்பிடிப்பதை நிறுத்தியதால் மிச்சமாகும் தொகை உங்கள் உடல் நலத்தில் ஏற்படும் மேம்பாடு, சுற்றுச்சூழலில் ஏற்படும் அபிவிருத்தி இவற்றைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பாருங்கள்.

புகைபிடிப்பதை நிறுத்துபவர்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு ஏறத்தாழ மூன்று இலட்சமாகும். நீங்களும் அதில் ஒருவராக வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.எம்.எஸ். எமன்கள்!

## புதிய ஆபத்தில் மாணவர்கள்

நாட்டின் வருங்காலத் தலைவர்கள், தூண்கள் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் மாணவத் தலைமுறை விதவிதமான போதைகளில் தங்கள் எதிர்காலத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கிறது. குடும்பத்துக்கும் தங்களுக்கும் உள்ள இரத்த உறவைக்கூட கொஞ்சம் கொஞ்சமாக மறந்து கொண்டிருக்கிறது.

சமீபத்தில் கல்லூரியொன்றுக்கு சென்றோம். அப்போது நம்மிடம் இரண்டு ஆசிரியர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, 'மாணவர்கள் சமீபகாலமாக நவீன போதை ஒன்றுக்கு அடிமையாகி மனநோயாளிகளாக மாறிவிடும் அபாயத்தில் இருக்கின்றனர்' என்ற பகீர் தகவலைச் சொன்னார்கள். 'அதென்ன நவீன போதை?' என்று நாம் பதற்றத்துடன் கேட்க, 'எல்லாம் நாகரிக வளர்ச்சியின் அடையாளமான செல்போன் தான்!' என்றார்கள். நாம் காற்றுப்போன பலூனாய், 'அட என்னங்க செல்போன் இல்லாதவர்கள் யார் இருக்கிறார்கள். இதெப்படி போதையாகும்' என்று அலுத்துக்கொண்டோம்.

'அதுதான் இல்லை! அந்த செல்போனால் தான் மாணவர்கள் மிகப்பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர்' என்று அதிர வைத்த ஆசிரியர்கள் நம்மிடம் தொடர்ந்து பேசியதன் சாராம்சம் இதுதான்.

'செல்போன்களை மற்றவர்கள் பயன்படுத்துவதற்கும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மாணவர்களில் 90 சதவீதம் பேர், பேசுவதைவிட எஸ்.எம்.எஸ்.அனுப்புவதற்குத்தான் செல்போனைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வலையில் சிக்கியுள்ள மாணவ,மாணவிகள் ஒரு நாளைக்குக் குறைந்தது 2 மணி நேரத்தில் இருந்து 5 மணி நேரம் வரையாவது எஸ்.எம்.எஸ்.போதையில் கட்டாயம் விழுந்து விடுகின்றனர். முதலில் உடன்படிப்பவர்களுடன் பரிமாறிக்கொள்ளும் இந்த எஸ்.எம்.எஸ்.தொடர்புகளை தினம் தினம் அதிகப்படுத்திக் கொள்கின்றனர். குறைந்தது 10 பேராவது தங்களுக்கு வரும் எஸ்.எம்.எஸ்.ஸுக்கு பதில் அனுப்புவது கட்டாயமாகிவிட்டது. ஆரம்பகட்டத்தில் விதவிதமான எஸ்.எம்.எஸ்.களைப் பார்த்து ரசிக்கும் மாணவ, மாணவிகள் அதை நல்ல 'டைம் பாஸ்' என்று நினைத்துக் கொண்டு தினமும் தொடர்கின்றனர்' என்று ஆசிரியர்கள் தொடர்ந்து அதிர்ச்சிகளைப் பட்டியலிட்டனர்.

'எங்களுக்குத் தெரிந்த ஒரு மாணவி நன்றாகப் படிக்கக்கூடியவள். எல்லோரிடமும் சகஜமாகப் பழகும் குணமுடையவள். திடீரென சித்தப் பிரமை பிடித்தது போல் வீட்டிலே முடங்கிவிட்டாள். வீட்டில் உள்ளவர்களிடம் எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தாள். உச்சக்கட்டமாக தன் தலைமுடியைத் தானே பிய்த்துக் கொடு ஒரு மாதிரியாக இருந்திருக்கிறார். அவளின் பெற்றோர் அவளை டாக்டர்களிடமெல்லாம் அழைத்துச் சென்றனர். ஆனால், டாக்டர்களோ மாணவி சாதாரணமாகத்தான் இருக்கிறாள் என்று கூறியிருக்கின்றனர்.

ஒரு வாரம் கழித்து அந்த மாணவியின் செல்போனைத் திருத்தி வந்த அவரது தந்தை அதை மேசை மீது வைத்துவிட்டு தனது மனைவியிடம் 'ஏம்மா? மகளின் செல்போனை திருத்தியாச்சு...' என்று கூறியுள்ளார். அவ்வளவுதான்! அறையில் படுத்திருந்த அந்த மாணவி ஒருவித சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்து ஓடி வந்து அந்த செல்போனை எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் போய்விட்டாள். அதன் பிறகு அந்த மாணவி எப்போதும் போல் நலமாகப் பேசத் தொடங்கி தன் இயல்பு நிலைக்கு வந்துவிட்டாள்!

அப்போதுதான் 'அந்த மாணவியின் செல்போன் பழுதடைந்து விட்டதால் திருத்தக் கொண்டு போய்விட்டார் அவரது தந்தை. அதிலிருந்துதான் தன் நிலை மறந்து போயிருக்கிறாள் அந்த மாணவி.

எஸ்.எம்.எஸ். அனுப்புவதில் தீவிரமாக இருந்துவிட்ட அவளுக்கு அது இல்லாமல் போனது ஒருவித மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது' என்பது டாக்டர்கள் மூலம் தெரிய வந்தது. இதன்பிறகு மாணவியின் பெற்றோர் அவளைக் குணமாக்க தினம் ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்று ரிலாக்ஸ் செய்கின்றனர். எப்போதும் தங்கள் கண்பார்வையிலேயே வைத்திருக்கின்றனர்.

பல மாணவர்களின் நிலை இந்த மாணவியைப் போன்றுதான் இருக்கிறது. அவர்களால் ஒருநாள் கூட செல்போனில் எஸ்.எம்.எஸ். பார்க்காமலோ, அனுப்பாமலோ இருக்க முடிவதில்லை. வேண்டுமானால் நீங்கள் எந்த மாணவரையாவது பரிசோதித்துப் பாருங்கள்! இது பற்றி நாங்களே எங்கள் கல்லூரி மாணவ,மாணவிகளிடம் சொன்னோம். அவர்களும் ஒருநாள் அப்படி இருந்துவிட்டு ஆமாம் சேர் அப்படி இருந்து பார்த்தால் எதையோ இழந்த மாதிரி இருக்கு என்றார்கள். இன்னும் சிலர் தங்கள் முழுக்கவனத்தையும் இதில் காட்டிவிட்டு படிப்பை கோட்டைவிட்டு விடுகின்றனர்.




இதைவிட செல்போனில் எஸ்.எம்.எஸ்.அனுப்பத் தொடங்கிய நாளில் இருந்து தங்கள் குடும்பத்தாருடன் இருந்த நெருக்கத்தை மறந்துவிடுகின்றனர் மாணவர்கள். தனிமையில் இருந்து சிரித்துக் கொண்டும் எஸ்.எம்.எஸ்.பார்த்து தனக்குத் தானே பேசிக்கொண்டும் எல்லா உறவுகளையும் மறந்துவிடுகின்றனர். இதனால் அவர்கள் மனநோயாளியாகும் அபாயத்திற்குத் தள்ளப்படுவதாக மனநல ஆலோசகர்கள் கூறுகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்தானே!

இது பொதுவான விடயம். செல்போனால் இன்னும் பல விபரீதங்களும் அரங்கேறிக் கொண்டிருப்பது பெற்றோர்களை அதிர்ச்சியடைய வைக்கிறது.

சில வக்கிர மன்மத ராசாக்கள் தங்களிடம் அறிமுகமாகும் மாணவிகளுக்கு முதல் பத்து நாட்கள் வரை நகைச்சுவை எஸ்.எம்.எஸ்.களை அனுப்புகின்றனர். சில சமயம் நல்ல உபதேசங்களையும் எஸ்.எம்.எஸ்.ஆக அனுப்புகின்றனர். திடீரென 11 ஆவதுநாள் 'குட் நைட்' எஸ்.எம்.எஸ். வரும். அதில் 'ஸ்வீட் டிரீம்ஸ்' என்ற வார்த்தை இடம்பெறும். சம்பந்தப்பட்ட பெண் உறங்கப் போகும் இரவு 11 மணிக்கு மேல் அந்த எஸ்.எம்.எஸ். வரும். பிறகு காலையில் 'குட்மோர்னிங்' என்று மெஸேஜ் அனுப்புவார்கள். அதில் 'சில்லுனு ஒரு மோர்னிங்' என்று இதமாய் தங்கள் குரூரத்தைத் தொடக்குவார்கள். பிறகு இதயம் படம் போட்டு அதில் குட்மார்னிங்,குட் நைட் வரும்.

இதைப்பார்த்து ஒரு சில மாணவிகள் ஆரம்பத்திலேயே கட் பண்ணிக் கொள்வார்கள். ஒரு சிலர் தினமும் நல்ல டைம்பாஸ் என்று நட்பைத் தொடர்வார்கள். அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் வக்கிர புத்திக்காரர்கள்' எனக்கு ஃபிரெண்டா இருந்தா ஒரு ரிங்டோன் அனுப்பு. லவ்வாரா இருந்தா ஐ லவ் யூ சொல்லு. இரண்டுமே இல்லைனா ஒரு நகைச்சுவையாவது அனுப்பு..ன்னு எஸ்.எம்.எஸ். அனுப்புவாங்க. பிறகு எதிர்முனையில் அந்த மாணவியின் பதிலுக்கு ஏற்றாற்போல் அடுத்த எஸ்.எம்.எஸ்.ஸை அனுப்புவார்கள்.

ஒரு கட்டத்தில் வக்கிரக்காரர்கள் 1/2 நிமிடம், 1 நிமிடம் ஓடக்கூடிய ஆபாசப் படங்களை டவுன்லோட் செய்து அனுப்புவார்கள். இதைப்பார்த்து சம்பந்தப்பட்ட மாணவி ஏடாகூடமாகத் திட்ட வந்தால் ஓ ஸாரிடா. உன்னை மாதிரி ஒரு எஸ்.எம்.எஸ்.ஃபிரெண்ட் கேட்டா. அவ நம்பருக்கு அனுப்புறதுக்குப் பதில் உன் நம்பருக்கு அனுப்பிட்டேன். ஸாரிடா என்று சமாளிப்பார்கள். ஆனால், மாணவிகளிடமிருந்து எந்தக் கோபமும் வெளிப்படாவிட்டால் வக்கிரக்காரர்கள் காட்டில் மழைதான்.

இப்படி எஸ்.எம்.எஸ்.ஸால் மாணவ சமுதாயமே முடங்கிக் கிடக்கிறது. இதில் தங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளும் விடயங்கள் பட்டவர்த்தனமாக அரங்கேறும். அந்தரங்க விவகாரங்கள் எல்லாம் எழுத்துவடிவில் சொல்ல முடியாதவை என்று வேதனைப்பட்டார்கள் ஆசிரியர்கள்.

தங்கள் பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றி மகிழும் பெற்றோர் அவர்களைக் கண்காணிப்பதும் முக்கிய கடமை. அதை முழுதாய் பெற்றோர் செய்யாவிடில் எஸ்.எம்.எஸ். போனாலும் வேறு வடிவில் இன்னொரு போதை வந்து கொண்டுதான் இருக்கும். எதிலும் சிக்கிவிடாமல் குழந்தைகளை மனப் பக்குவத்தோடு வளர்த்தெடுப்பது பெற்றோர் கைகளில்தான் இருக்கிறது.

பி.ஆர்.ஆனந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

# காகங்களும் புத்திசாலிகளே!



## நிரூபிக்கிறது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வு

சிறுவர்களுக்கு ஒரு கதை சொல்வார்கள். காக்கைக்கு தாகம் எடுத்தது. தண்ணீரை தேடி நீண்ட தூரம் சுற்றித் திரிந்தது. ஓரிடத்தில் பானையில் தண்ணீர் இருப்பதை கண்டது. ஆசையோடு கீழே வந்தது காகம். ஆனால், தண்ணீர் அதற்கு எட்டாத ஆழத்தில் அடியில் கிடந்தது. பார்வைக்கு எட்டியது பசியை போக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டது.

தாகம் நாக்கை பிடுங்க யோசனையில் மூழ்கியது காகம். அருகில் கிடந்த கற்களை எடுத்து பானைக்குள் போட்டது. மெல்ல மெல்ல தண்ணீர் மேலே உயர்ந்தது. பின்னர் தாகம் தீர தண்ணீரைக் குடித்தது காகம்.

குழந்தைகளின் சிந்தனையை தூண்டுவதற்காக சொல்லப்படும் கதை இது. இந்தக் கதை கற்பனை அல்ல நிஜம் என்பது தற்போது ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

உயிரினங்களில் அதிகப்படியான மூளை வளர்ச்சி உள்ளவர்களாக மனிதர்கள் விளங்குகிறார்கள். அதற்கு அடுத்தபடியாக புத்திசாலித்தனமாக செயல்படும் விலங்கு சிம்பன்சிக் குரங்குகள், பென்குயின், எறும்பு, நாய், திமிங்கிலம், எலி ஆகியவையும் ஓரளவு புத்திசாலித்தனமாக செயல்படுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வரிசையில் காக்கைகளும் சிறந்த அறிவுத்திறனுடன் செயல்படுவதை சமீபத்திய ஆய்வு நிரூபித்துள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் காணப்படும் ஒரு வகை காக்கை இனம் ரூக்.

இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் காக்கைகளின் தன்மைகள் பற்றி ஆய்வு செய்தனர். ஆய்வின் போது ஒரு கைப்பிடியுடன் கூடிய சிறிய வாளியில் காக்கையின் உணவான புழுக்களை வைத்தனர். அந்த வாளியை கண்ணாடி குழாயை நிறுத்தி வைத்து அதனுள் வைத்தனர். அருகில் ஒரு மெல்லிய கம்பியையும் கிடக்கச் செய்தனர். பின்னர் காக்கைகளின் செயல்களை கண்காணித்தனர்.

முதலில் காக்கைகள் உணவை அடைய முயற்சி செய்தன. அதில் உள்ள தடைகளை அறிந்ததும் யோசிக்கத் தொடங்கின. பின்னர் அருகே கிடந்த கம்பியை எடுத்து அலகால் நெம்பி கொக்கிபோல வளைத்தன. பின்னர் கண்ணாடிக் குழாய்க்குள் கிடந்த சிறு வாளியை கொக்கியில் கோர்த்து மேலே தூக்கி சிறப்பாக செயல்பட்டன.

இந்த ஆய்வின் மூலம் ரூக் இன காக்கைகளுக்கு மனித குரங்குகளுக்கு (சிம்பன்சி) இணையாக அறிவுத்திறன் இருப்பதாக ஆய்வாளர்கள் உறுதி செய்கிறார்கள்.

தெற்கு பசுபிக் கடல் பகுதியில் வசிக்கும் நியூகலேடோனியன் காக்கைகளும் உணவு தேடும்போது குச்சிகளை பயன்படுத்தி தரையை தோண்டும் வழக்கம் உடையவை. அதன் சார்பு இனமான ரூக் காக்கைகளும் முதன் முதலாக கருவிகளை பயன்படுத்துவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான ஆய்வில் 5 ஆண்டுகளாக ஈடுபடுபவர் கிறிஸ்டோபர் போர்டு. அவர் ஆய்வு குறித்து கூறியதாவது;

"அநேக விலங்கினங்கள் அவசிய தேவையின்போது புத்திசாலித்தனத்துடன் செயற்படும். அதாவது கண்டிப்பாக இது தான் இன்றைய உணவு என்னும் கட்டாய நிலையில் (சூழ்நிலைக்கைதியாகும் போது) அவைகள் எத்தகைய தடையையும் போராடி ஜெயிக்க முயல்கிறது.

கூண்டுகளில் வளர்க்கப்பட்ட இந்த காக்கைகளும் பல்வேறு விதங்களில் செயல்படுகின்றன. ஒவ்வொரு முறையும் செய்யும் தவறுகளை திருத்திக் கொண்டு மாற்று முறையில் செயல்பட்டன. அதே நேரத்தில் கூண்டில் அடைத்து பாதுகாப்பதால் கூடுகட்டுவது, உணவு தேடுவது போன்ற வேலைகள் இவைகளுக்கு இல்லை. எனவே, அவை குறித்து காக்கைகள் சிந்திக்கவில்லை.

ஆய்வில் நான்கில் 3 காக்கைகள் ஒரே முயற்சியில் கம்பியை கொக்கிபோல் வளைத்து விட்டன. ஒரு காக்கை 4 முறை முயற்சி செய்து வெற்றி பெற்றது.

இதேபோல், (தாகம் தீர்க்கும் கதைபோல) குழாய்க்குள் சரியான அளவுள்ள கற்களை நிரப்பும் சோதனையிலும் காக்கைகள் ஈடுபடுத்தப்பட்டன. இதிலும் அவை சிரமமின்றி இயல்பாகவே செயல்பட்டு வியக்க வைத்தன.

இறுதியில் ரூக் காக்கைகள் புத்திசாலித்தனமாக செயல்படுவது ஆய்வில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகிறது." என்றார்.



# பல்லை செதுக்கி கண்ணாக்கிய விஞ்ஞானிகள்

கண்கள் ஒரு அதிசயம் நிறைந்த முக்கியமான உறுப்பு. மனிதன் 80 சதவீதத்துக்கும் அதிகமான தகவல்களை கண்கள் வழியாகவே அறிகிறான் என்பது ஒரு ஆய்வு.

அப்படி இருக்கும் போது கண்கள் இல்லாவிட்டால் நமக்கு இந்த உலகம் எப்படித் தோன்றும்? நினைக்கும் போதே மனசு சங்கடப்படுகிறதுதானே. அவ்வளவு முக்கியம் வாய்ந்த கண்கள் அதற்கான ஊட்டச்சத்துக்கள் கிடைக்காதபோதும் திடீர் விபத்துக்களாலும் பாதிக்கப்படுகிறது. பார்வை குறைபாடு ஏற்பட்டால் கண்ணாடியோ, லென்ஸோ அணிந்துகொள்ளலாம். ஆனால் பார்வை இழந்துவிட்டால் என்ன செய்வது?



நாம் பார்க்கும் திறனில் கண்களில் உள்ள கார்னியா, ரெட்டினா என்னும் பகுதிகள் அதிகம் துணைபுரிகிறது. கார்னியா பகுதி மட்டுமே பிரதிபலிப்பு திறனை அறிவதில் 60 சதவீத அளவில் உதவுகிறது. இது பாதிக்கப்பட்டாலும் பார்வை இழப்பு ஏற்படுகிறது.

தற்போது இப்படி கார்னியா பாதிக்கப்பட்டு பார்வை இழந்தவர்களுக்காக சிகிச்சை அளிப்பதற்கு புதிய முறை கண்டுபிடித்து இருக்கிறார்கள் விஞ்ஞானிகள். பாதிக்கப்பட்டவர்களின் பற்களை செதுக்கி புதிய லென்ஸாக கண்ணில் பொருத்தினால் புதிய செயற்கை கண் (கார்னியா) ரெடியாகிவிடும். இதுதான் அந்த புதிய முறை.



அமெரிக்காவில் இந்த முறையில் சோதனை செய்து வெற்றி கண்டுவிட்டார்கள். மியாமி மில்லர் பல்கலைக்கழக மருத்துவ கூடத்தில் இதற்கான ஆய்வுகள் நடந்தது. ஷாரூன் தோன்டான் என்னும் பெண் சிறு வயதிலேயே வியாதியால் கண் பார்வையை இழந்தார். அவரது கண்களில் கருவிழியில் உள்ள கார்னியா பாதிக்கப்பட்டதால்தான் அவருக்கு பார்வை இழப்பு ஏற்பட்டது.


இதை சரி செய்யும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மேற்கொண்டனர். ஆராய்ச்சி முடிவில் பற்களின் எனாமல் பகுதியை லென்ஸுகளுக்குப் பதிலாக பொருத்தி பார்வையை பெற முடியும் என்று கண்டுபிடித்தனர்.

இதற்காக பல் ஒன்றை எடுத்து அவற்றை குறிப்பிட்ட வடிவில் செதுக்கினார்கள். பின்னர் அந்தப் பற்துண்டு கருவிழி வடிவ ஒரு கருவியின் துளையில் பொருத்தப்பட்டது. பிறகு அதை கன்னம் அல்லது தோள்பட்டை பகுதி தோலுக்கடியில் புதைத்து வைக்கிறார்கள். இரண்டு மாதம் கழித்து அதனை எடுத்து கண்களில் லென்ஸ் போல பொருத்திவிடுகிறார்கள். அது இயல்பான பார்வைக்கு துணைபுரியும் கார்னியாபோல செயல்பட தொடங்கிவிடுகிறது.

இந்த முறைக்கு (*Modified Osteo Odonto Keratoprothesis Procedure*) என்று பெயரிட்டு உள்ளனர். இந்த முறையில் கார்னியா பாதிக்கப்பட்டு பார்வை இழந்தவர்களுக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என்று தெரியவந்துள்ளது.

இந்த ஒபரேஷன் முடிந்த சில மணி நேரங்களில் ஷாரூனால் இந்த உலகத்தை பார்க்க முடிந்தது. 2 வாரங்களில் அவர் புத்தகங்களையும் வாசிக்க ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வாளர் ஒருவர் கூறும்போது, ஷாரூனின் கார்னியா பாதிக்கப்பட்டு மற்ற நரம்புகள் நல்ல முறையில் செயல்பட்டதால் சரி செய்ய முடிந்ததாக தெரிவித்தார்.

# பிளாஸ்டிக்கில் இருந்து எரிபொருள்



பிளாஸ்டிக் நெகிழாத் தன்மை கொண்டது. டீ கோப்பை, பொலித்தீன் பைகள் முதற்கொண்டு அலங்காரப் பொருட்கள் உட்பட நாம் பயன்படுத்தும் ஏராளமான பொருட்களில் பிளாஸ்டிக் சேர்க்கப்பட்டு உள்ளது. இதனால் நாள்தோறும் வீணாகும் கழிவுகளிலும் அதில் அதிக அளவில் பிளாஸ்டிக்கும் கலந்து இருக்கிறது.

இது நெகிழாத் தன்மை கொண்டது மட்டுமல்லாமல், மறுசுழற்சி செய்தாலும் காற்றுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் தன்மை உடையது. அதனால்தான் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் உலகில் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில், பிளாஸ்டிக்கை உபயோகமான ஒரு வழியில் மறுசுழற்சி செய்யலாம் என்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. ஏராளமாகக் குவியும் இந்தக் கழிவுகளை பெற்றோல்,டீசல் போன்ற ஒரு மாற்று எரிபொருளாக மாற்றிவிடலாம் என்பது தான் அந்தப் புதிய முறை.

இந்த முறையில் ஒரு டன் பிளாஸ்டிக் கழிவில் இருந்து 3 முதல் 5 பரல் எரிபொருளைத் தயாரிக்கலாம். இந்த ஒயில் தாவர எண்ணெய் போன்ற கலங்கலான நிறத்திலும் மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்ற சிறிது மணமுடனும் இருக்கும். இந்த எண்ணெயை மோட்டார் எரிபொருளாகப் பயன்படுத்தலாம்.

இப்படி பிளாஸ்டிக்கில் இருந்து தயாரிக்கப்படும் எரிபொருளைப் பயன்படுத்த ஒரு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. பல்வேறு நிறு[illegible] வரும் காலத்தில் உ[illegible] பிளாஸ்டிக் [illegible] பரவலாகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதையோர வியாபாரிகள்



அண்மைக் காலமாக நாட்டின் பல்வேறு நகரங்களிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதன் காரணமாக நடைபாதை வியாபாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இவ்வாறான நடைபாதை வியாபாரிகள் நகரங்களில் வியாபாரம் மேற்கொள்வதனால் வீதி விஸ்தரிப்பு, போக்குவரத்து, இடைஞ்சல்கள் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை,மாநகர சபை,நகர சபையினர் இவர்களை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் மாத்தளை மாநகர சபை ஊழியர்கள் அப்பகுதி வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத நடைபாதை கடைகளை அப்புறப்படுத்துவதில் மாநகர சபையினர் ஈடுபடும்போது ஊழியர்களுக்கும் இவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன.

அதேபோன்று, கண்டி பொதுச் சந்தையில் நகர வீதியோர சட்டத்திற்கு முரணாக மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட நடைபாதை வியாபாரிகளுக்கும் நகரசபை ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் வியாபாரிகள் பலர் காயமடைந்துள்ளதுடன் 10 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

நடைபாதை வியாபாரிகளின் வாழ்க்கை பரிதாபத்துக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. தமது குடும்பத்தை கொண்டு நடத்துவதற்காக அவர்கள் வீதியோரங்களில் படும் அவஸ்தைகள், தமது பொருட்களை விற்பதற்காக படும்பாடுகள் மிகவும் வேதனைக்குரியவை.

நடைபாதையோர வியாபாரியான சுரேஷ்குமார் தனது வியாபாரம் தொடர்பாகக் கூறுகையில்;

'நான் கடந்த 15 வருடமாக இத்தொழிலையே மேற்கொண்டு வருகிறேன். கடந்த காலங்களில் இவ்வியாபாரம் மேற்கொள்வதில் ஏற்பட்ட சிரமம் குறைவாக இருந்தபோதும் தற்போது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறேன்.

அதனோடு மாநகர சபை உறுப்பினர்கள் எமது கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளுடன் வாழும் நான் இதன் மூலமே குடும்ப செலவுகளைச் செய்து வருகிறேன். இருப்பினும் ஓரளவுக்கு மேல் செலவு செய்ய முடியாதுள்ளது. இதனால் மிகவும் கஷ்டப்படுகிறோம்.

இவ் அபிவிருத்திப் பணிகளுக்காக மாநகர சபையினர் மேற்கொள்ளும் பணிகளுக்கு நாம் ஆதரவு வழங்கி ஒத்துழைக்க வேண்டுமாயின் எம்போன்று பாதையோரங்களில் வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கென ஒரு அங்காடி நிலையமொன்றை அமைத்து நடைபாதை வியாபாரிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு எமது உழைப்பிற்கு உறுதுணையாக நிற்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

## எதிர்நோக்கும் சவால்களும் அவலங்களும்

மேலும், நடைபாதை வியாபாரத்தை மேற்கொள்வதற்கான காரணங்களை நடைபாதையோர வியாபாரியான தீபன்ராஜ் என்பவர் கூறும்போது;

'ஏனைய வியாபாரங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் போதியளவு பொருளாதார வளங்கள் தேவைப்படுகிறது. சொந்தக் கடைகளை வைத்து பணமீட்ட கூடியளவு வசதிகள் இல்லாமையினாலேயே நான் இவ்வியாபாரத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு அன்றாட வாழ்வினைக் கொண்டு செல்ல முடியும்' என்றார்.

இவ்வாறான வீதியோர வியாபாரிகளால் போக்குவரத்துப் பாதிப்புகள் ஏற்படுவது மட்டுமன்றி, பயணிப்போர்,நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இவர்கள் பெரும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வியாபாரம் செய்வதால் அந் நிலையங்களுக்கு மக்கள் செல்வதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அத்துடன், மீன் வியாபாரிகள் கூட தாம் விரும்பும் இடங்களில் வியாபாரம் நடத்துவதால் அவ்விடங்களில் துர்நாற்றம் வீசுவது மட்டுமன்றி, இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமுள்ளது.

மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் காலை,மாலை வேளைகளில் குப்பைகளை அகற்றி வருகின்ற போதிலும் இவ்வாறான வியாபாரங்களின்போது தொடர்ந்தும் கழிவுகள் வீசப்படுவதால் அப்பகுதி அசுத்தமாகக் காணப்படுவதாகவும் இதற்கெதிராக மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க இன்று வடக்கில் யுத்தமற்ற புதிய சூழலொன்று உருவாகியுள்ள நிலையில், யாழ். குடாநாடு வர்த்தக கேந்திர நிலையமாக மாறியுள்ளது. யாழ்.குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் யாழ் நோக்கிப் பயணிக்கின்றனர். இதில் தென்பகுதி வியாபாரிகளின் அளவும் அதிகரித்துள்ளது.

இதனால் குடாநாட்டில் உள்ள வியாபாரிகள் இவர்களின் வருகை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளை இவர்கள் ஆக்கிரமித்துள்ளதால் இவ்வீதியால் போக்குவரத்து செய்யமுடியாதுள்ளதுடன், பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், உள்ளூராட்சி சபையின் ஸ்தாபனக் கோவைச் சட்டத்தின்படி நடைபாதை வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களின் கடைகளை அகற்ற வேண்டிய பொறுப்பு மாநகர சபைகளுக்கேயுரியதாகவேயுள்ளபோதும் நடைபாதை வியாபாரிகள் தொடர்பில் சற்று மனிதாபிமானத்துடனேயே அவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

சொந்தமான கடைகளை வைத்திருக்குமளவுக்கு பணவசதி இல்லாத நிலையிலேயே வறுமைக் கோட்டிற்குட்பட்ட பலர் நடைபாதையோரங்களில் கடைகளை வைத்து தமது அன்றாட வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அத்துடன், பொருளாதார வசதிகளற்ற மக்களும் இவ்வாறான நடைபாதையோர வியாபாரிகளிடமே பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். ஏனெனில், அவர்களால் பெரும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்ய பொருளாதார நிலை இடங்கொடாது.

எனவே, வறுமை நிலையால் வீதியோரங்களில் கடைகளை நடத்தும் இந்த வியாபாரிகள் தமது குடும்பத்திற்காகவும் தம்மைப் போன்ற வறிய குடும்பங்களுக்காகவுமே மழை,வெய்யில் மாநகரசபை,நகரசபை போன்றவற்றின் பல்வேறு சவால்களுக்கும் அன்றாடம் முகங்கொடுத்து வருகின்றனர். சட்டத்தின்படி வீதியோர நடைபாதைக் கடைகள் குற்றமானதாக இருந்தாலும் அவர்களின் இயலாமையைக் கருத்தில் கொள்வது அவசியம்.

இவ்வாறானவர்களை சட்டத்தின் படி தண்டிப்பதையோ, அவர்களின் கடைகளை இடித்தழிப்பதையோ கைவிட்டு நகரத்தின் ஓர் பகுதியில் அவர்களுக்கென எந்த வாடகைகளையும் அறவிடாது ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுத்து அந்த வியாபாரிகளின் குடும்பமும் ஒரு நாளைக்கு இருவேளையாவது உணவருந்தக்கூடிய வழிவகைகளையே மாநகரசபை எடுக்க வேண்டும். அதேவேளை, நடைபாதை வியாபாரிகளுக்கு கடன் உதவிகளை வழங்கி அவர்கள் நிரந்தரமான வியாபார நிலையங்களை சட்டரீதியான இடங்களில் அமைப்பதற்கு வங்கிகளும் உதவிகளை வழங்கினால் நடைபாதையோர வியாபாரத்திற்கு எந்த அவசியமும் ஏற்படாது.



எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்ட விதிகளால் அவதி

## பாதிக்கப்படும் டெனிஸ் வீரர்கள்



சர்வதேச டெனிஸ் கூட்டமைப்பின் கடுமையான விதிமுறைகளால், முன்னணி டெனிஸ் வீரர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஆண்டு முழுவதும் டெனிஸ் மைதானத்தில் ஓடிக்கொண்டேயிருக்கும் இவர்களுக்கு ஓய்வு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. இதனால் வீரர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

கிரிக்கெட்டை விட டெனிசில் தான் உடல் உழைப்பு அதிகம். குறைந்தது ஒரு மணிநேரமாவது ஓடிக்கொண்டே திறமையைக் காட்ட வேண்டும். கிரிக்கெட்டைப் போலவே ஆண்டு முழுவதும் டெனிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதனால் வீரர்கள் ஓய்வின்றி தவித்து வருகின்றனர்.

**விதிமுறைகள்:**

டெனிஸ் அரங்கில் உள்ள கடுமையான விதிமுறைகள், வீரர்களுக்கு சாதகமாக அமையவில்லை. தரவரிசைப் பட்டியலில் முதல் -30க்குள் இருக்கும் வீரர்கள், நான்கு கிராண்ட்ஸ்லாம், 8 மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடர்கள் உட்பட ஆண்டுக்கு 18 டெனிஸ் தொடர்களில் கட்டாயம் பங்கேற்க வேண்டும். இவை தவிர, டேவிஸ் கிண்ணம் உள்ளிட்ட இதர தொடர்களிலும் அவர்கள் விளையாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். இதனால் ஆண்டுக்கு குறைந்தது ஒரு மாதம் கூட அவர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை.

**வீரர்கள் அதிருப்தி:**

டெனிஸ் கூட்டமைப்பின் போட்டி அட்டவணையால் பெரும்பாலான வீரர்கள் அதிருப்தியில் உள்ளனர். இடைவிடாது போட்டியின் காரணமாக அண்மையில் சீனாவில் நடைபெற்ற 'ஷாங்காய்' மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடரிலிருந்து உலகின் 'நம்பர்-1' வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் விலகினார். மற்றொரு பிரபல வீரர் ஆன்டி முர்ரேவும் (பிரிட்டன்) காயம் காரணமாக இதில் பங்கேற்வில்லை.

இத் தொடரின் இரண்டாவது சுற்றின் போது காயமடைந்த அமெரிக்காவின் ஆன்டி ரோடிக், பாதியில் தொடரை விட்டு வெளியேறினார். இவர்கள் அனைவரும் தொடர்ந்து நடக்கும் போட்டி தான், காயத்துக்கான காரணம் என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உலகின் இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் கூறுகையில், ' ஆண்டு முழுவதும் டெனிஸ் தொடர்களில் விளையாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனவரி 1 ஆம் திகதி தொடங்கும் போட்டிகள், டிசம்பர் 5 ஆம் திகதி வரை நீடிக்கின்றன. புல் தரை மைதானங்களில் விளையாடுவதை விட, களிமண் களத்தில் அதிகமாக திறமை காட்ட வேண்டியுள்ளது .

இதனால் அடிக்கடி காயமடைய நேரிடுகிறது. காயம் காரணமாக முக்கிய தொடரான விம்பிள்டனில் நான் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. வீரர்களின் நலனை கருத்தில் கொண்டு இப்பிரச்சினைக்கு சர்வதேச டெனிஸ் கூட்டமைப்பு நல்ல முடிவெடுக்க வேண்டும்' என்றார்.





# கை கொடுக்கிறார் வற்சன்

மத்யூ ஹைடன் ஓய்வுக்கு பின் சிறந்த தொடக்க வீரர் இல்லாமல் தவித்த அவுஸ்திரேலிய அணிக்கு ஷேன்வற்சன் கைகொடுத்துள்ளார். ஹைடன் போல மிக நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடும் இவர், சகலதுறைகளிலும் சாதிப்பது சிறப்பம்சம். இவரது திறமைக்கு சாம்பியன்ஸ் தொடர் (மினி உலகக் கிண்ணம்) நல்ல உதாரணம்.

இத்தொடரில் அவுஸ்ரேலிய அணி கிண்ணத்தை தக்க வைத்துக் கொள்ள ஷேன்வற்சனின் அபார ஆட்டமே முக்கிய காரணம்.

சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மூன்று லீக் போட்டியில் விளையாடிய வற்சன் 24 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். அரையிறுதி மற்றும் இறுதியாட்டத்தில் அடுத்தடுத்து சதமடித்த இவர், அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடம் (265 ஓட்டங்கள்) பிடித்தார். முதலிடத்தில் அவுஸ்திரேலிய கப்டன் பொண்டிங் (288 ஓட்டங்கள்) இருந்தார். அரையிறுதி மற்றும் இறுதியாட்டத்தில் வெற்றிக்கு வித்திட்ட இவர் ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இது தவிர, ஐந்து போட்டிகளில் விளையாடி 6 விக்கெட் வீழ்த்தினார். இத்தொடரில் அதிக சிக்சர் (11 சிக்சர்) விளாசிய வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். தவிர, அதிக சதம் (2 சதம்) கடந்த வீரர்கள் வரிசையில் முதல் இடம் வகித்தார். இவர் சமீபகாலமாக விளையாடிய ஒருநாள் தொடரில் சகல துறைகளிலும் எழுச்சி கண்டு அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்துள்ளார். எனவே, இம் மாதம் இறுதி சுற்றுப் பயணம் செய்யவுள்ள அவுஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரிலும் இவர் அசத்தும் பட்சத்தில் கிண்ணத்தை வென்று சாதிக்கலாம்.

வற்சனின் சமீபத்திய செயற்பாடுகள்.

தொடர், போட்டி, ஓட்டங்கள், சதம், அரைச்சதம், விக்கெட்

சாம்பியன்ஸ் கிண்ணம்- 5, 265, 2, 0, 6

இங்கிலாந்து- 7, 153, 0, 0, 10

ஸ்கொட்லாந்து- 1, 68, 0, 1, 3

பாகிஸ்தான்- 5, 27, 1, 1, 1, 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனுபவ வீரர் அணியில் இல்லை!

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. காயத்திலிருந்து குணமடைந்த செவாக், யுவராஜ் மீண்டும் அணியில் வாய்ப்புப்பெற்றனர். அனுபவ வீரர் ராகுல் டிராவிட் நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியா வரவுள்ள அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. முதல் போட்டி 25 ஆம் திகதி வதோதராவில் நடக்கிறது. மொத்தமுள்ள 7 போட்டிகளில் முதல் 2 போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று முன்தினம் சென்னையில் தேர்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த், இந்தியக் கப்டன் தோனி மற்றும் தேர்வாளர்கள் கலந்துகொண்டனர்.

**மீண்டும் செவாக்:** அணியின் கப்டனாக தோனி நீடிக்கிறார். தோள்முட்டுக் காயத்துக்குச் சத்திரசிகிச்சை செய்துகொண்ட செவாக் காயம் குணமடைந்த நிலையில், அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார். சாம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு முன்பாகக் கைவிரலில் காயமடைந்த மற்றொரு அதிரடி வீரர் யுவராஜ் சிங்கும் தனது இடத்தை உறுதி செய்துள்ளார். இவர்கள் இருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் இந்திய அணி முழுப்பலத்துடன் காட்சியளிக்கிறது. சச்சின், கம்பீர்,ரெய்னா ஆகியோர் வழக்கம் போல வாய்ப்பு பெற்றுள்ளனர்.

**டிராவிட் நீக்கம்:** அனுபவ வீரர் டிராவிட் இந்தமுறை அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். இவரது இடத்தை இளம் விராத் கோஹ்லி தட்டிச்சென்றார். சாம்பியன்ஸ் கிண்ணத்தொடரில் சொதப்பிய யூசுப் பதான், தினேஷ், கார்த்திக் ஆகியோருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அபிஷேக் நாயரும் நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு மாற்றாக ரவீந்திர ஜடேஜா சேர்க்கப்பட்டுள்ளார்.

**அறிமுக வீரர்:** அணியில் வாய்ப்புக் கிடைத்தும் சமீபகாலமாகப் பந்து வீச்சில் ஏமாற்றமளித்து வந்த ஆர்.பி.சிங் வாய்ப்பை நழுவவிட்டார். இவருக்குப் பதில் அறிமுகவீரராக உத்தரபிரதேச வீரர் சுதீப் தியாகி தேர்வு செய்யப்பட்டுள்ளார். சலஞ்சர் கிண்ணத்தில் அசத்திய முனாப் படேல் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

**பந்து வீச்சே பலம்:**

சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய பந்து வீச்சு விமர்சனத்துக்குள்ளான நிலையில், பந்து வீச்சாளர்கள் தேர்வில் தீவிரம் காட்டப்பட்டுள்ளது. மற்றப்படி ஆஷிஸ் நெஹ்ரா,இஷாந்த் சர்மா அணியில் தொடர்கின்றனர். சுழற்பந்து வீச்சாளர்களாக ஹர்பஜன்,அமித் மிஸ்ரா அசத்தவுள்ளனர். அவுஸ்திரேலிய தொடருக்கான இந்திய அணியில் 7 துடுப்பாட்ட வீரர்களும் 7 பந்த வீச்சாளர்களும் ஒரு சகல துறைவீரரும் தேர்வாகியுள்ளனர்.

முதல் 2 போட்டிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட இந்திய அணி: தோனி (கப்டன்), சச்சின், செவாக், கம்பீர், யுவராஜ், ரெய்னா, விராத் கோஹ்லி, ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, ஹர்பஜன், இஷாந்த் சர்மா, முனாப் படேல், சுதீப் தியாகி, பிரவீண் குமார் மற்றும் ஆஷிஸ் நெஹ்ரா.

**தொடரும் சோகம்:** இளம் வீரர்களின் செயல்பாடுகள் திருப்தியளிக்காத நிலையில், இரண்டு மாதங்களுக்கு முன் இலங்கையில் நடந்த முக்கோண ஒருநாள் தொடரில் டிராவிட்டுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இத்தொடரில் விளையாடிய மூன்று போட்டிகளில் (14,39,47) மொத்தம் 100 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஏமாற்றமளித்தார். அதற்குப் பின் விளையாடிய சாம்பியன்ஸ் கிண்ணத்தில் இரண்டு போட்டிகளில் (76,4) விளையாடினார். இதில் 80 ஓட்டங்கள் எடுத்தார். எதிர்பார்த்தளவுக்கு டிராவிட் சாதிக்காத நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

**பிரசாத், ரொபின் சிங் நீக்கம்:** இந்திய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் வெங்கடேஷ் பிரசாத் மற்றும் களத்தடுப்புப் பயிற்சியாளர் ரொபின் சிங் ஆகியோரை அதிரடியாக நீக்கியுள்ளது இதில் இந்திய கிரிக்கெட்சபை. (பி.சி.சி.ஐ.) இவர்கள் இருவரும் 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்குப்பின் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த ஆண்டில் நடந்த இரண்டாவது 'ருவென்ரி-20' உலகக் கிண்ணம் மற்றும் சாம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களில் இந்திய அணியின் பந்துவீச்சுப் படுமோசமாக அமைந்தது. களத்தடுப்பும் பாராட்டும்படியாக இல்லை. இதனால், அதிருப்தியடைந்த பி.சி.சி.ஐ.அதிரடி முடிவை எடுத்துள்ளது. இத்தகவலை பி.சி.சி.ஐ. செயலர் சீனிவாசன் உறுதி செய்துள்ளார். தவிர, தற்போதைக்கு வேறு யாரையும் பயிற்சியாளராக நியமிக்கவில்லை என பி.சி.சி.ஐ.தெரிவித்துள்ளது. இவர்கள் இருவரும் நீக்கப்பட்டதற்குக் குறிப்பிட்ட எந்தக் காரணமும் கூறப்படவில்லை.

**பிரசாத் வருத்தம்:** இந்த முடிவு தனக்கு மிகவும் வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார் பிரசாத். இது குறித்து அவர் கூறுகையில்;

'பதவி நீக்கம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் எனக்கு தெரிவிக்கப்படவில்லை. இது உண்மை என்றால், நான் மிகவும் வருத்தமும் ஏமாற்றமும் அடைவேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக எனது பணியைச் சிறப்பாகச் செய்துவந்தேன். பி.சி.சி.ஐ.யிடம் தொடர்பு கொண்டு நான் நீக்கப்பட்டதற்கான காரணத்தை அறிய முயற்சிப்பேன்' என்றார்.

களத்தடுப்புப் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ள ரொபின் சிங், அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்கவுள்ள மூன்றாவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்குப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஸ்ரீகாந்த் மகிழ்ச்சி:** அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் செவாக், யுவராஜ் இடம் பெறுவது அணியின் பலத்தை அதிகரிக்குமெனத் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்;

இத்தொடருக்குப் பலமான அணியைத் தேர்வு செய்துள்ளோம் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். செவாக் , யுவராஜ் அணிக்குத் திரும்பிருப்பது கூடுதல்பலம். கடந்த சில ஆண்டுகளாக இரண்டு அணிகள் பங்கேற்கும் தொடர்களில் இந்திய அணி சாதித்துள்ளது. இந்தமுறை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா தொடரைக் கைப்பற்றுமென நம்புகிறேன்' என்றார்.

**ஆஸி அணி வருகை:** இந்தியாவுக்கு எதிரான ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கும் ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியினர் 20 ஆம் திகதி மும்பை வருகின்றனர். 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மும்பை கிரிக்கெட் சங்க மைதானத்தில் பயிற்சி மேற்கொள்ளவுள்ளனர். அதன்பின் முதல் ஒருநாள் போட்டியில் பங்கேற்க வதோதரா செல்கின்றனர்.

15 பேர் கொண்ட ஆஸி, அணி வீரர்கள்: ரிக்கி பொண்டிங் (கப்டன்), மைக்கேல் ஹசி (துணைக்கப்டன்), போலிங்கர், நாதன் ஹாரிட்ஸ், ஜோன் ஹாலந்து, பென் ஹில்பெனாஸ், ஜேம்ஸ் ஹோப்ஸ், மிட்சல் ஜோன்சன், பிரட்லீ, ஷோன் மார்ஷ், ரிம்பெய்ன், பீற்றர் சிடில், அடம் வோக்ஸ், ஷேன் வற்சன், கமரூன் வைட்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை அதிரவைத்த சிறுவன் வேடிக்கையா? பிரபல்ய மோகமா?

**வாஷிங்டன்:** ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூனில் பறந்து காணாமல் போயிருப்பதாக அமெரிக்கா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஆறுவயதுச் சிறுவன் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட இரு மணித்தியாலங்களின் பின்னர் அவனது வீட்டின் மேற்தள அறையொன்றிலிருந்த பெட்டியினுள் மறைந்திருந்த உண்மை வெளியாகியுள்ளது.

பெரும் பரபரப்பையும் இலட்சக்கணக்கான டொலர்கள் செலவீனத்தையும் ஏற்படுத்திய இச்சம்பவம் அமெரிக்காவின் கொலரோடா மாநிலத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்ட முழு நேரத்திலும் பால்கொன் ஹீனி என்னும் இச்சிறுவன் அவனது வீட்டிலேயே மறைந்திருந்ததாக லறிமெர் ஷெரீப் ஜிம் அல்டெர்டன் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.


பால்கொன் பலூனில் பறந்துவிட்டதாகத் தான் கருதுவதாக பால்கொனின் சகோதரர் கூறியதையடுத்தே பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை தீவிரப்படுத்தியிருந்தனர்.

பலூனைத் தேடும் நடவடிக்கைகள் அந்நாட்டு தொலைக்காட்சியொன்றிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், அமெரிக்க விமானப்படை மற்றும் மாநில விமான சேவைகள் என்பனவும் உசார் நிலையில் வைக்கப்பட்ட அதேவேளை, தேடுதலுக்காக இரு ஹெலிகொப்டர்களும் கொலரோடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பலூனைத் தேடும் காட்சிகள் அதனைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவருக்குமே திகிலை ஏற்படுத்தியிருந்தது.

தேடுதல்கள் ஆரம்பித்த இரு மணித்தியாலங்களின் பின்னர் இப்பலூன் இம்மாநிலத்தின்



தென் கிழக்குப் பகுதியிலுள்ள சமதரையொன்றில் தரையிறங்கியதைக் கண்ட மீட்புப் பணியாளர்கள் அவ்விடத்திற்கு விரைந்தனர்.

தரையில் கிடந்த பலூனை ஆராய்ந்த மீட்புக் குழுவினர் சில செக்கன்களில் அதற்குள் எவருமில்லையென்பதை உறுதிப்படுத்திய போதும் இச்சிறுவன் வேறு எங்காவது வீழ்ந்து மரணித்திருக்கலாம் என்ற அச்சம் அனைவருக்கும் உருவானது.

இந்நிலையிலே இச்சிறுவன் வீட்டின் மேல் மாடியிலிருந்த அறையொன்றில் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டதாக ஷெரீப் அல்டெரன் அறிவித்தார்.

இவ்வீடு இரு தடவைகள் பொலிஸாரால் சோதனையிடப்பட்டதாகத் தெரிவித்த அவர் இச்சிறுவனின் சகோதரனிடம் பொலிஸார் மீண்டும் மீண்டும் கேள்விகளைக் கேட்டபோது பால்கொன் பலூனின் பறந்ததைத் தான் பார்த்ததாக ஒரே பதிலையே அவர் திருப்பி திருப்பிக் கூறியதாக அல்டெரன் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்திற்கு முன்தினம் பால்கொன் பலூனில் ஏறியதைக் கண்ட அவரது தந்தை பால்கொனைத் திட்டியதாகவும் அதனால் பால்கொன் உடனடியாக அதிலிருந்து இறங்கிவிட்டதாகவும் தந்தை ரிச்சர்ட் ஹீனி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தந்தை தன்னை திட்டியதால் மிகவும் மனவருத்தமடைந்த நிலையில் தான் மாடியறையில் ஒளிந்திருந்ததாக பால்கொன் கூறியுள்ளார்.

சுமார் ஏழாயிரம் அடி உயரத்திற்குப் பறக்கக் கூடிய இப்பலூன் தரையைத் தொடுவதற்கு முன்னர் 40 மைல்கள் தூரத்திற்கு பறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நாடகம் உண்மையிலேயே சிறுவர்களால் வேடிக்கையாக அரங்கேற்றப்பட்டதா அல்லது இது பிரபலத்தைத் தேடும் முயற்சிகளில் ஒன்றா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

எனினும், சிறுவர்களின் இந்நாடகம் மகிழ்ச்சியுடன் முடிவடைந்துள்ள போதும் மீட்பு முயற்சிகளுக்கு இலட்சக்கணக்கான டொலர்கள் செலவழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனிதநேயத்திற்கு நம்பிக்கையூட்டும் திருநாள் தீபாவளி — மில்லிபாண்ட்

**லண்டன்:** மனித நேயத்திற்கு நம்பிக்கையூட்டும் நாளாக தீபாவளித் திருநாள் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் பல்வேறு கலாசாரங்கள் ஒன்றிணைந்து நாட்டை வளப்படுத்துவதை இத்திருநாள் நினைவுபடுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவிப்பதாகக் கூறிய மில்லிபாண்ட தெற்காசியாவிலுள்ள தமது நண்பர்கள் மற்றும் பிரிட்டனிலுள்ள பல்வேறு சமூகத்தினர் தீபாவளியை மிக முக்கியமான பண்டிகையாகக் கொண்டாடுவதாகத் தெரிவித்துள்ளார்.

நட்புணர்வு, மகிழ்ச்சி ஆகியவற்றை அளிப்பதுடன், அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்கும் நாளாக தீபாவளி விளங்குவதாகவும் ஏராளமான சவால்களை உலகம் எதிர்நோக்கிய இத்தருணத்தில் இப்பண்டிகை நாள் இருளிலிருந்து ஒளியை ஏற்படுத்தும் நாளாக அமைய வேண்டுமெனவும் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

## ஒபாமாவின் தீபாவளிக் கொண்டாட்டம்

**வாஷிங்டன் :** வெள்ளை மாளிகையில் தீபாவளியைக் கொண்டாடிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உலகெங்கிலும் தீபாவளியைக் கொண்டாடும் அனைவருக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் சமய நிகழ்ச்சிகளின் பின்னர் 'ஹப்பி தீபாவளி' சால் முபாரக் என உரத்துக் கூறிய ஒபாமா, அமெரிக்காவிலும் உலகெங்கிலுமுள்ள இந்து, சீக்கியர் உள்ளிட்ட பல்லின மக்களும் இன்று சனிக்கிழமை தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். வாழ்வில் இருளை அகற்றி ஒளியேற்றும் அறியாமையை அகற்றி அறிவை வளர்க்கும் இப்பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது வாழ்த்துகள் என்றார்.



முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் காலத்திலேயே வெள்ளை மாளிகையின் தீபாவளிக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் இக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட முதலாவது அமெரிக்க ஜனாதிபதியென்ற பெருமையை ஒபாமா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெல்சன் மண்டேலா மிகச் சிறந்த யதார்த்தவாதி

ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் குறிப்புகள் அவரின் தவறுகளை வெளிப்படுத்தும் வகையில் யதார்த்தமாக அமைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிராங்பேர்ட் புத்தகக் கண்காட்சி கடந்த வாரத்தில் இடம்பெற்றபோது நெல்சன் மண்டேலா நிதியத்தினால் அவ்ரின் நாட்குறிப்பு கடிதம் உள்ளிட்ட 10 ஆயிரம் எழுத்தாவணங்களின் உரிமைகள் விற்கப்பட்டன.இந்த ஆவணங்களே மண்டேலாவின் யதார்த்தமான போக்கை வெளிப்படுத்தியுள்ளன.

வாக்களிக்கும் வயதெல்லையை 14 ஆகக் குறைத்த திட்டம் தவறான முடிவென்பதை அதில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன்,பல்கலைக்கழகத்தில் பயின்ற காலப்பகுதியில் தான் சிறந்தபுத்திசாலி மாணவனாக இருக்கவில்லையென்பது பற்றியும் இதில்தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரசியல் தலைவர்களில் யாரும் இதுபோன்று நமது வாழ்வின் முழுமையையும் வெளியிட்டதாக கேள்விப்பட்டது இல்லை.அவரைப் போல் எவரும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக கூறுவார்கள் என நம்பவில்லையென இந்த ஆவணங்களை பெற்ற இலக்கிய ரசிகரொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணங்கள் நெல்சன் மண்டேலாவின் வாழ்வை ஊடறுத்துக் காட்டும் யன்னல் போன்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்





# இருதயத்துக்குள் புகுந்த தையல் ஊசி

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் ஜம்மு நகரைச் சேர்ந்த பொறியியல் மாணவனின் இதயத்துக்குள் புகுந்த தையல் ஊசியொன்றை காந்தத்தின் உதவியுடன் எந்தவொரு உடலுறுப்புக்குமே சேதமில்லாமல் டாக்டர்கள் வெளியே எடுத்த சம்பவம் பெரும் வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 24 வயதான பிரசாந்த் ஷலோத்ரா என்ற மாணவன் சில தினங்களுக்கு முன்னர் மிகுந்த களைப்புடன் வீடு திரும்பி படுக்கைக்குச் சென்றான். கட்டிலில் திரும்பிப்படுத்த போது மார்பின் இடதுபக்கத்தில் நுள்ளுவது போன்று வேதனை ஏற்பட்டது. ஒரு தையல் ஊசி அவனது இருதயத்துக்குள் அரைவாசி குத்தி ஊடுருவியிருந்தது. திடுக்கிட்டு எழுந்து பார்த்தபோது மாணவனின் மார்பில் அந்த ஊசியின் சிறியபகுதி வெளியே துருத்திக் கொண்டிருந்தது. அதை இழுத்தெடுப்பதற்காக முன்னோக்கி குனிந்த போது ஊசி மேலும் உள்ளுக்குள் ஊடுருவிச் சென்றது.

மூன்று நாட்களாக அந்த 4 சதமமீற்றர் தையல் ஊசி பிரசாந்தின் இருதயத்துக்குள்ளேயே சிக்கிக் கிடந்தது. ஜம்மு நகரில் டாக்டர்கள் ஊசியை வெளியே எடுப்பதற்காக சத்திரசிகிச்சை மேற்கொண்டபோதிலும், அது இருதயத்தில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் பிரசாந்த் தலைநகர் புதுடில்லியில் உள்ள எஸ்கோர்ட்ஸ் ஹார்ட் இன்ஸ்ரிரியூட்டுக்கு கொண்டுவரப்பட்டான். அங்கு டாக்டர்கள் மிகவும் சிக்கல் வாய்ந்த சத்திரசிகிச்சையை, ஒரு காந்தத்தை பயன்படுத்தி மேற்கொண்டு இருதயத்துக்கு சேதமில்லாமல் ஊசியை வெற்றிகரமாக வெளியே எடுத்தனர்.

தனது மகனுக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து தாயார் சோமா தேவி கூறுகிறார்;

ஜம்முவில் உள்ள அரசாங்க மருத்துவக் கல்லூரிக்கு மகனைக் கொண்டுசென்றோம் அங்கே டாக்டர்கள் சில மருத்துவகைகளைத் தந்துவிட்டு சகலதுமே சரியாகிப் போய் விடும் என்றனர். தாங்கள் வேலை நிறுத்தம் செய்வதால் மூன்று நாள் கழித்து மீண்டும் தங்களை வந்துபார்க்குமாறு அந்த டாக்டர்கள் கூறினர்.

வேதனையைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் பிரசாந்த் தவித்தார். அதனால் அவனை தனியார் மருத்துவமனையொன்றுக்கு கூட்டிச்சென்றோம். அங்கே ஊசியை வெளியே எடுக்க டாக்டர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் இருதயத்துக்குள் அந்த ஊசி இருக்கும் இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்களுக்குப் பிறகு பிரசாந்தைப் புதுடில்லி எஸ்கோர்ட்ஸ் ஹார்ட் இன்ஸ்ரிரியூட்டுக்கு அழைத்து வந்தோம். ஏற்கெனவே ஒரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இன்ஸ்ரிரியூட்டின் டாக்டர்கள் பிரசாந்தை மீண்டும் உடனடியாகச் சத்திரசிகிச்சைக்குட்படுத்தினர்.

எஸ்கோர்ட்ஸ் இன்ஸ்ரிரியூட் பணிப்பாளரும் இருதய சத்திரசிகிச்சை நிபுணருமான டாக்டர் வை.கே. மிஸ்ரா தாங்கள் மேற்கொண்ட சத்திரசிகிச்சை குறித்து விபரிக்கையில் கூறியதாவது;

சி.ரி.ஸ்கான் செய்த போது ஊசி இருக்கும் அண்ணளவான இடத்தை எம்மால் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இருதயத்தின் இடது கீழ் அறையைச் சுற்றி தடித்த தசைகளில் ஊசி மாட்டுப்பட்டிருந்தது. ஆனால், இருதயத்தை நாம் அடைந்த போது ஊசியை எம்மால் காண முடியவில்லை. அது மேலும் ஆழமாக ஊடுருவிச் சென்றுவிட்டது.

ஊசி மேலும் இருதயத்திற்குள் ஊடுருவுவதைத் தடுக்க வேண்டியிருந்ததால் இருதயத்தின் இயக்கத்தை நிறுத்த வேண்டியிருந்தது. பிரசாந்துக்கு இருதய- சுவாசப்பை இயந்திரம் பொருத்தப்பட்டது. இருதயத்திற்குள் எந்தப்பாகத்தில் ஊசி இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது எங்களுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது.

இருதயத்தின் ஒவ்வொரு சுருக்கத்தின் போதும் ஊசி உள்ளே மேலும் ஊடுருவிச் சென்று கொண்டிருந்தது. பெரிய தசைத் துண்டுகளுக்கு இடையில் 3-4 சதமமீற்றர் நீளமான ஊசியைக் கண்டு பிடிப்பது. பெரும் [illegible] இருதயத்துக்கு [illegible] கோளாறைத் தோற்றுவித்து விடுமென்பதால் அதன் இடது கீழ் அறையை சுற்றியுள்ள தசைகளின் தடித்த அடுக்குகளை எம்மால் வெட்டித் திறக்க முடியவில்லை. வழமையான செயன்முறை மூலமாகவே இருதயத்திற்குள் சென்றடைய நாம் தீர்மானித்தோம். இடது கீழ் அறையின் சுவரை ஊசியின் முனை துளைத்திருந்ததால் எமது பணி சுலபமானதாக அமைந்து விட்டது. இருதயத்தின் இடது பக்கத்திலுள்ள் வால்வின் உட்பக்கத்தில் கூர்ந்து பார்த்த போது ஊசியின் முனையை மாத்திரமே என்னால் காணக் கூடியதாக இருந்தது.

ஊசியின் பெரும்பகுதி இன்னமும் கூட தசைகளிலேயே மாட்டுப்பட்டிருந்ததால் வால்வின் உட்பக்கத்தில் ஊசியை இழுத்தெடுப்பதற்கு காந்தமொன்றைப் பயன்படுத்தத் தீர்மானித்தோம். எமது சத்திரசிகிச்சை உபகரணங்களின் உதவியுடன் ஊசியின் முனையைப் பிடிக்க முடிந்தது. அதன் காரணத்தினால் தான் ஊசியை இழுத்தெடுக்க காந்தத்தைப் பயன்ப்டுத்தத் தீர்மானித்தோம்.

பிரசாந்தை அதிர்ஷ்டசாலி என்று தான் கூற வேண்டும். ஊசி குருதிச் சுற்றோட்டத்திற்குள் சென்றிருக்கவில்லை. அவ்வாறு சென்றிருந்தால் மூளை உட்பட முக்கியமான உடலுறுப்புகளுக்குப் பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தியிருக்கும். இருதயமே முழு உடலுக்கும் இரத்தத்தைப் பாய்ச்சுகிறது. ஊசியின் முனையை நான் கண்டிருக்காவிட்டால் அதன் இருந்த இடத்தைக் கண்டு பிடிப்பதென்பது பெரும் கஷ்டமாகப் போயிருக்கும் என்று டாக்டர் மிஸ்ரா கூறினார்.

இன்னும் சில தினங்களில் பிரசாந்த் வீடு திரும்பவிருக்கிறான்.

## காந்தத்தைப் பயன்படுத்தி வெளியே எடுத்த டாக்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.